1117

பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு

1. முதுமொழிக்காஞ்சி
2. நீதிநெறி விளக்கம்

(உரையுடன்)

7 - JUN 1921

ஸீனியர்

(முதற் பகுதி-ஏழாம் வகுப்பு அல்லது இரண்டாம் பாரத்துக்கு)

ன் அண்டு கம்பெனி., லிமிடெட்,
ம்பாய், கல்கத்தா, லண்டன்.

TB
O-,1x72
M29
L25381

திவான்பஹதூர்-வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

இயற்கை விளக்க வாசகங்கள்.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிது சிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேல்நாட்டுப் பள்ளிக்கூடங்களில், பாலர் வகுப்பு முதற்கொண்டே இயற்கைஞானம் கற்பிக்கப்படுவது அவசியமாய் விட்டது. நம் நாட்டிலும் பிள்ளைகள் அறிவில் சிறந்து வளர்ந்து தம் நாட்டுக்கும் தங்களுக்கும் உபகாரிகளாவதென்ருல், நம் பள்ளிக்கூடங்களிலும் இயற்கைஞானம் போதிப்பது அவசியமாதல் வேண்டும். பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து, காலஞ்சென்ற திவான் பஹதூர்-வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் இயற்கை விளக்க வாசகங்கள் என்ற தொகுதியில் பல பாடபுஸ்தகங்கள் எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்தியாயர்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனல் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கைஞானமும் போதனு முறையும் மிக விருத்தியடைந்துள்ளபடியால், அவ்விருத்தியை அனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு :—

					அ.	பை.
முதற் புஸ்தகம்	..	..	..	விலை	2	0
இரண்டாம் ,,	..	..	..	,,	3	0
மூன்றும் ,,	..	..	..	,,	4	0
நான்காம் ,,	..	..	..	,,	5	0
ஐந்தாம் ,,	..	..	..	,,	6	0

திவான்பஹதூர்: ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ். (லண்டன்.) எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்.)
தொகுத்த

தமிழ் இலக்கியத் திரட்டு.

ஒரு நாட்டாரின் நாகரிக விருத்தியை அளவிட்டறியச் சாதனமாயிருப்பது அந்நாட்டாரின் இலக்கியமே. நம் தமிழ்நாட்டு முற்கால இலக்கியம், பிறநாட்டு முற்கால இலக்கியங்களுக்குப் பின்வாங்காத பெருமையும் அருமையும் உடையதாயிருக்கிறது. ஆயினும், அது தற்கால மாணவர்க்குப் பயன்படா வகையில் பரந்து கிடக்கிறது. அதனை மாணவர்க்குப் பயன்படும் வகையில் சிறு சிறு பகுதிகளாகத் திரட்டிக் கொடுப்பதே இத்தொகுதியின் நோக்கம். இதில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன.

பகுதி I. (14 வசனபாடங்கள், 12 செய்யுட்பாடங்கள்.) 12 அணு.
பகுதி II. (15 வசனபாடங்கள், 8 செய்யுட்பாடங்கள்.) 8 ,,

16.4.24

EASY SELECTIONS

FROM

TAMIL POETRY

[WITH NOTES]

SENIOR

Part I—For VII Class or II Form

பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு

உரையுடன்

ஸீனியர்

(முதற்பகுதி—ஏழாம் வகுப்பு அல்லது இரண்டாம் பாரத்துக்கு)

மாக்மில்லன் அண்டு கம்பெனி., லிமிடெட்,
சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்.
1924

ரிஜிஸ்தர் செய்தது.]

[விலை, 3½ அணா.

உள்ளுறை :

1. முதுமொழிக்காஞ்சி

(கூடலூர் கிழார் அருளிச்செய்தது.)

2. நீதிநெறி விளக்கம்

(குமாரகுருபரசுவாமிகள் அருளிச்செய்தது.)

முதுமொழிக்காஞ்சி

1. சிறந்த பத்து.

(சிறப்புடைய பத்து விஷயங்கள் என்பது இதன்பொருள்.)

**ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.** 1

(பதவுரை.) ஆர்கலி உலகத்து — கடல் சூழ்ந்த உலகத்தில் (உள்ள), மக்கட்கு எல்லாம்—மக்கள் யாவருக்கும், ஓதலின்—(நன்னூல் களைப்) படித்தலைப்பார்க்கினும், ஒழுக்கம் உடைமை—நல்லொழுக்க முடையராயிருத்தல், சிறந்தன்று—சிறப்புடையதாம்.

காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல். 2

(ப—ரை.) காதலின் — (ஒருவன் பிறரிடத்து வைத்திருக்கும்) அன்புடைமையைப் பார்க்கினும், கண் அஞ்சப்படுதல்—(அவர் வருந்துவதைக்) கண்டு (தான்) அஞ்சுதல், சிறந்தன்று—.

மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை. 3

(ப—ரை.) மேதையின்—(மேலுமேலு மொருவன் பல நூல்களைக் கற்று) அறிவுடையனுதலைப் பார்க்கினும், கற்றது—(தான் நல்லாசிரியன் மாட்டுக்) கற்ற நூற்பொருள்களை, மறவாமை—மறவா திருத்தல், சிறந்தன்று—.

வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை. 4

(ப—ரை.) வண்மையின் (ஒருவன்) ஈகையுடையனு யிருத்தலைப் பார்க்கினும், வாய்மை உடைமை—உண்மை யுடையவனு யிருத்தல், சிறந்தன்று—.

இளமையிற் சிறந்தன்று மெய்ப்பிணி யின்மை. 5

(ப—ரை.) இளமையின் — (ஒருவன்) இளமைப்பருவமுடையனு யிருத்தலைப் பார்க்கினும், மெய்—உடம்பின்கண், பிணி இன்மை—நோயின்றி யிருத்தல், சிறந்தன்று—.

நலனுடை மையி னாணுச் சிறந்தன்று. 6

(ப—ரை.) நலன் உடைமையின்—(ஒருவன்) அழகுடையவனு யிருத்தலைப் பார்க்கினும், நாணு—நாணம் (வெட்கம்) உடையனு யிருத்தல், சிறந்தன்று—.

குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று. 7

(ப—ரை.) குலன் உடைமையின்—(ஒருவன்) உயர்குடியிற் பிறந்திருத்தலைப் பார்க்கினும், கற்பு—கல்வியறிவுடையவனுயிருத்தல், சிறந்தன்று—.

கற்றலிற் கற்ருரை வழிபடுதல் சிறந்தன்று. 8

(ப—ரை.) கற்றலின்—(ஒருவன் நன்னூல்களைக்) கற்றலைப் பார்க்கினும், கற்ருரை—கல்வியறிவுடையாரை, வழிபடுதல்—வழிபட்டொழுகுதல், சிறந்தன்று—.

செற்ருரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று.

(ப—ரை.) செற்ருரை—(தன்னை) வருத்தியவரை, செறுத்தலின்—(தான் மாருகத் துணைவலி நேரிட்டகாலத்து) வருத்துதலைப் பார்க்கினும், தன் செய்கை—தன்னைச் செப்பமுடையவ னுக்கிக்கொள்ளுதல், சிறந்தன்று—.

முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று. 10

(ப—ரை.) முன் பெருகலின்—முன்னே (ஒருவன் செல்வத்தால் மேலுமேலும்) விருத்தியாதலைப் பார்க்கினும், பின் சிறுகாமை—(உள்ள செல்வம்) பின்னே குறையாதிருத்தல், சிறந்தன்று—.

2. அறிவுப் பத்து.

(அறிதற்குரியவாகிய பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை யீரத்தி னறிப. 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் — கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள மக்கள் யாவருள்ளும், பெருமையில் பிறந்தமை — (ஒருவர்) பெருங்குடியிற் பிறந்திருத்தலை, ஈரத்தின் — (அவர் பிராணிகளிடத்து வைத்திருக்கும்) அன்பினல், அறிப—(மேலோர்) அறிவார்கள்—.

ஈர முடைமை யீகையி னறிப. 2

(ப—ரை.) ஈரம் உடைமை—(ஒருவர் பிராணிகளிடத்து) அன்புடையரா யிருத்தலை, ஈகையின்—(தம்மை யாசித்தவர்க்குத் தம்மிடத்துள்ளதை இல்லை யென்னாது) கொடுத்தலினால், அறிப—.

சோரா நன்னட் புதவியி னறிப. 3

(ப—ரை.) சோரா நல் நட்பு—(எக்காலத்துந் தம்மிடத்தொருவர் வைத்துள்ள)·மறத்தலில்லாத சிறந்த சிநேகத்தை, உதவியின்—(தமக்கு ஆபத்து நேரிடுங்காலத்துச் செய்யும்) உதவியினால், அறிப—.

கற்ற துடைமை காட்சியி னறிப. 4

(ப—ரை.) கற்றது உடைமை—(ஒருவர்) கல்வியறிவுடையரா யிருத்தலை, காட்சியின்—(அவரது வார்த்தையின்) பொலிவினாலே, அறிப—.

ஏற்ற முடைமை யெதிர்கோளி னறிப. 5

(ப—ரை.) ஏற்றம் உடைமை—(ஒருவர்) மேன்மை யுடையரா யிருத்தலை, எதிர்கோளின்—(பிறரை) எதிர்கொண் டழைப்பதனால், அறிப—.

சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப. 6

(ப—ரை.) சிறு இல் பிறந்தமை—(ஒருவன்) இழிகுடியிற் பிறந்திருத்தலை, பெருமிதத்தின்—(அவனது) செருக்கினால், அறிப—.

குத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப. 7

(ப—ரை.) குத்திரம் செய்தலின்—(ஒருவன்) வஞ்சகச்செய்கை யுடையனா யிருத்தலினால், கள்வன் ஆதல்—(அவன்) திருடனாக இருத்தலை, அறிப—.

சொற்சோர் வுடைமையி னெச்சோர்வு மறிப. 8

(ப—ரை.) சொல் சோர்வு உடைமையின்—(ஒருவன் சொல்லுஞ்) சொல்லிற் றவறுடையனாயிருத்தலினால், எ சோர்வு உம்—(அவனது) எல்லாத் தவறுகளையும், அறிப—.

அறிவுசோர் வுடைமையிற் பிறிதுசோர்வு மறிப. 9

(ப—ரை.) அறிவு சோர்வு உடைமையின்—(ஒருவன்) அறிவு சோர்ந்திருத்தலினால், பிறிது சோர்வும்—(அதனின்) வேறாய (அவனது) உடலின் தளர்ச்சியையும், அறிப—.

சீருடை யாண்மை செய்கையி னறிப. 10

(ப—ரை.) சீர் உடைய ஆண்மை—(ஒருவரது) சிறப்புடைய வீரத்தை, செய்கையின்—(அவர் போர்முகத்தஞ்சாது போர்புரியும் வீரச்) செயலாலே, அறிப—.

3. பழியாப் பத்து.

(பழிக்கக்கூடாத பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
யாப்பி லோரை யியல்புகுணம் பழியார். 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், யாப்பு இல்லோரை—கட்டுப்பாட்டிற் கடங்காது நடப்பவரை, இயல்பு குணம்—(அவர்க்கு) இயற்கையாயுள்ள தீக்குணத்தைப்பற்றி, பழியார்—(அறிவுடையோர்) பழித்துக் கூறுர்.

மீப்பில் லோரை மீக்குணம் பழியார். 2

(ப—ரை.) மீப்பு இல்லோரை—மேன்மையில்லாதவரை, மீகுணம்—(அவர்) வெளிப்படக்காட்டும் (பேதைமைக்) குணத்தைப்பற்றி, பழியார்—.

நிறையச் செய்யாக் குறைவினை பழியார். 3

(ப—ரை.) நிறைய செய்யா—(ஒருவன் முன்னரே ஆலோசித்து) முற்றுப்பெறச் செய்யாத, குறைவினை—குறைபாடுடைய காரியத்தைப் பற்றி, பழியார்—.

முறையி லரசர்நாட் டிருந்து பழியார். 4

(ப—ரை.) முறையில்—நீதியில்லாத, அரசர்நாடு—அரசர்களது தேசத்தில், இருந்து—வசித்து, (அவ்வரசரையே) பழியார்—.

பெருமை யுடையத னருமை பழியார். 5

(ப—ரை.) பெருமை உடையதன்—(யாவரும் விரும்பும்) மகத்துவமுடைய பொருளினது, அருமை—(கிடைத்தலின்) அருமையைப் பற்றி, (அதனைப்) பழியார்—.

அருமை யுடையதன் பெருமை பழியார். 6

(ப—ரை.) அருமை உடையதன்—(கிடைத்தற்கு) அருமையுடைய பொருளினது, பெருமை – மகத்துவத்தைப்பற்றி, (அதனைப்) பழியார்—.

செய்தக்க நற்கேளிர் செய்யாமை பழியார். 7

(ப—ரை.) செய்தக்க—(சமய நேர்ந்தபோது) செய்யத்தக்க காரியத்தை, நல் கேளிர்—சிறந்த சுற்றத்தார், செய்யாமை—(சமயத்தில்) செய்யாமையைப்பற்றி, (அவரைப்) பழியார்—.

அறியாத தேசத் தாசாரம் பழியார். 8

(ப—ரை.) அறியாத தேசத்து—(தாம்) அறியாத நாட்டில் வாழ்வோரது, ஆசாரம்—ஒழுக்கத்தைப்பற்றி, (அவரைப்) பழியார்—.

வறியோன் வள்ளிய னன்மை பழியார். 9

(ப—ரை.) வறியோன்—தரித்திரன், வள்ளியன் அன்மை—ஈகையையுடையவ னாகாமையைப்பற்றி, (அவனைப்) பழியார்—.

சிறியா ரொழுக்கஞ் சிறந்தோரும் பழியார். 10

(ப—ரை.) சிறியார்—கீழ்மக்களது, ஒழுக்கம்—தீயவொழுக்கத்தைக் (கண்டு), சிறந்தோரும்—(அறிவா விழிந்தோரே யன்றி) அறிவால் உயர்ந்தோரும், (அவரைப்) பழியார்—.

4. துவ்வாப் பத்து.

(வெறுக்கத்தக்க பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது. 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல்சூழ்ந்த உலகத்திலுள்ள மக்களியாவருள்ளும், பழியோர் செல்வம்—(பிறர்க்குங் கொடாது தாமு மநுபவியாது அறிவுடையோரால்) பழிக்கப் படுபவரது செல்வம், வறுமையின்—தரித்திரத்தைப் பார்க்கினும், துவ்வாது—வெறுக்கத்தக்கது.

கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது. 2

(ப—ரை.) கழி—மிகுதியும், தறுகண்மை—அஞ்சத்தக்கவிடத் தஞ்சாமை, பேடியின்—பேடியின் செய்கையைப்பார்க்கிலும், துவ்வாது—.

நாணில் வாழ்க்கை பசித்தலிற் றுவ்வாது. 3

(ப—ரை.) நாண் இல் வாழ்க்கை—(ஒருவர்) வெட்கமில்லாம லுயிர் வாழ்தல், பசித்தலின்—(உணவின்றிப்) பசித்திருத்தலைப் பார்க்கினும், துவ்வாது—.

பேணி லீகை மாற்றலிற் றுவ்வாது. 4

(ப—ரை.) பேண் இல்—விருப்பமில்லாமல், ஈகை —(யாசகர்க்கு ஒன்றைக்) கொடுத்தல், மாற்றலின் —(அவருக்கு இல்லை யென்று) மறுத்துரைப்பதினும், துவ்வாது—.

செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது. 5

(ப—ரை.) செய்யாமை—(ஒருவர் தாம்) செய்து முடித்தற் கியலாத காரியத்தை, மேற்கோள்—(யாம் செய்து முடிப்போமென்று) மேற்கொள்ளுதல், சிதடியின்—அறிவில்லாதவனது செய்கையைக் காட்டிலும், துவ்வாது—.

பொய்வே ளாண்மை புலைமையிற் றுவ்வாது. 6

(ப—ரை.) பொய் — பொய்யாக, வேளாண்மை—(ஒருவர்) உபகாரியாந் தன்மை, புலைமையின் —(பிறர்க்குத்) தீங்கியற்றுவதினும், துவ்வாது—.

கொண்டுகண் மாறல் கொடுமையிற் றுவ்வாது. 7

(ப—ரை.) கொண்டு—(ஒருவரைச் சிநேகமாகக்) கொண்டு, கண் மாறல்—பிறகவரிடத்து உபேக்ஷையா யிருத்தல், கொடுமையின்-(அவர்க்குத்) தீமை செய்வதினும், துவ்வாது—.

அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது. 8

(ப—ரை.) அறிவிலி—(தக்க தின்னது, தகாத தின்னதென்று பகுத்துணரும்) அறிவில்லாதவனை, துணைப்பாடு—(ஒருவன்) துணைகொண்டிருத்தல், தனிமையின்—தனித்திருத்தலினும், துவ்வாது—.

இழிவுடை மூப்புர கத்திற் றுவ்வாது. 9

(ப—ரை.) இழிவு உடை—வலி குறைதலுடைய, மூப்பு—கிழத்தனமானது, உரகத்தின்—பாம்போடு வாழ்தலினும், துவ்வாது—.

தானோ ரின்புறல் தனிமையிற் றுவ்வாது. 10

(ப—ரை.) தான் —(ஒருவன் உறவினரை நீக்கித்) தானே, ஓர் — ஒப்பற்ற, இன்பு உறல் — சுகத்தை யநுபவித்தல், தனிமையின் — (மனைவி மக்களின்றித்) தனித்திருத்தலினும், துவ்வாது—.

5. அல்ல பத்து.

(ஆகாத பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
நீரறிந் தொழுகாதா டார மல்லள். 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல் சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், நீர் அறிந்து — (கணவனது) வருவாயைத் தெரிந்து, ஒழுகாதாள் — (அதற்குத் தக்கவாறு) நடவாதவள், தாரம் அல்லள்—(அவனுக்கவள்) மனைவியாகமாட்டாள்.

தாரமா ணாதது வாழ்க்கை யன்று. 2

(ப—ரை.) தாரம்—மனைவியினால், மாணாதது — மாட்சிமைப்படாத வாழ்க்கை, வாழ்க்கை அன்று—இல்வாழ்க்கை யன்றாம்.

ஈரமல் லாதது கிளைநட் பன்று. 3

(ப—ரை.) ஈரம்—(மனத்தின்கண்) அன்பு, அல்லாதது — இல்லாத சினேகம், கிளை—விருத்தியாதற்கு (எதுவாகிய), நட்பு அன்று—சினேகமல்ல.

சோரக் கையன் சொன்மலை யல்லன். 4

(ப—ரை) சோரம் கையன்—களவொழுக்க முடையோன், சொல்—(தான்கூறுஞ்) சொல்லில், மலை—மாறுபாடா யிருத்தல், அல்லன்—ஆகான்.

நேரா நெஞ்சத்தோ னட்டோ னல்லன். 5

(ப—ரை.) நேரா—ஒற்றுமைப்படுதலில்லாத, நெஞ்சத்தோன்—மனமுடையோன், நட்டோன் அல்லன்—நட்பினனாகான்.

தேரா மற் கற்றது கல்வி யன்று. 6

(ப—ரை.) தேராமல்—(நல்லாசிரியனை யடுத்துத் தான் கற்றற்குரிய நூற்பொருளைச் செவ்வையாகத்) தெளிந்தறியாமல், கற்றது—(ஒருவன் தானே) கற்றறிந்தது, கல்வி அன்று—கல்வியல்ல.

வாழாமல் வருந்தியது வருத்த மன்று. 7

(ப—ரை.) வாழாமல்—(ஒருவ னில்லறத் திருந்து) வாழுதலின்றி, வருந்தியது—துன்பமடைந்தது, வருத்தம் அன்று—துன்பமல்ல.

2

அறத்தாற்றி னீயாத தீகை யன்று. 8

(ப—ரை.) அறத்து ஆற்றின்—தருமவழியினின்று, ஈயாதது—(இரப்பவர்க்குக் கொடுத்தற் குரியனவற்றைக்) கொடாதது, ஈகை அன்று—கொடையல்ல.

திறத்தாற்றி னோலா ததுநோன் பன்று. 9

(ப—ரை.) திறத்து ஆற்றின் – உண்மையான வழியில் நின்று, நோலாதது—விரதஞ் செய்யாதது, நோன்பு அன்று—விரதமல்ல.

மறுபிறப் பறியா ததுமூப் பன்று. 10

(ப—ரை.) மறுபிறப்பு—(இப்பிறப்பிலேயே) வேறு பிறப்பை, அறியாதது—தெரிந்துகொள்ளாதது, மூப்பு அன்று—(ஒருவனுக்கு) முதுமைப் பருவமல்ல.

6. இல்லை பத்து.

(இன்மையாகிய பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை. 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருள்ளும், மக்கள் பேற்றின் – பிள்ளைகளைப் பெறுதலைப் பார்க்கினும், பெறும்பேறு – அடையத்தக்க பாக்கியம், இல்லை—பிறிதொன்றில்லை.

ஒப்புர வறிதலிற் றகுவர வில்லை. 2

(ப—ரை.) ஒப்புரவு – (தாம் வாழுந் தேச) முறைமையை, அறிதலின்—அறிதலைப் பார்க்கினும், தகுவரவு - தக்கவரவுடைய பொருள், இல்லை——.

வாய்ப்புடை வழக்கி னல்வழக் கில்லை. 3

(ப—ரை.) வாய்ப்பு உடைய—தகுதியுடைய, வழக்கின்—வழக்கினை மேற்கொள்ளுதலைப் பார்க்கினும், நல்வழக்கு—சிறந்த வழக்கு, இல்லை—.

வாயா வழக்கிற் றீவழக் கில்லை. 4

(ப—ரை.) வாயா—தகுதியாகாத, வழக்கின் – வழக்கினைப் பார்க்கினும், தீ வழக்கு—கொடியவழக்கு, இல்லை—.

இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை. 5

(ப—ரை.) இயைவது — (தான் யாசகர்க்குக்) கொடுக்கக் கூடிய பொருளை, கரத்தலின் — (இல்லையென்று) மறைத்தலைப் பார்க்கினும், கொடுமை—தீமை, இல்லை——.

உரையில னாதலிற் சாக்கா டில்லை. 6

(ப—ரை.) உரை இலன் ஆதலின்—(அன்பினரோடு மனங் கலந்து ஒருவன்) வார்த்தையாடாதவனா யிருத்தலைப் பார்க்கினும், சாக்காடு—(அவனுக்கு) மரணம், இல்லை——.

நசையிற் பெரியதோர் நல்குர வில்லை. 7

(ப—ரை.) நசையின்—(ஒருவ னளவுக்கதிகமாகப் பொருள்களில்) ஆசைவைப்பதைப் பார்க்கினும், பெரியது—பெரிதாகிய, ஓர் நல்குரவு—ஒரு தரித்திரம், இல்லை——.

இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை. 8

(ப—ரை.) இசையின் — புகழடைதலைப் பார்க்கினும், பெரியது — பெரிதாகிய, ஓர்—ஒரு, எச்சம்—சந்ததி, இல்லை——.

இரத்தலி னூஉங் கிளிவர வில்லை. 9

(ப—ரை.) இரத்தலின் ஊஉங்கு—(ஒருவரிடத் தொன்றை) யாசித்தலைப் பார்க்கினும், இளிவரவு—இழிவு (அவமானம்), இல்லை——.

இரப்போர்க் கீதலி னெய்துஞ் சிறப்பில்லை. 10

(ப—ரை.) இரப்போர்க்கு ஈதலின்—யாசிப்போர்க்கு (அவர் வேண்டியவற்றைக்) கொடுத்தலைப்பார்க்கினும், எய்தும் சிறப்பு — அடையுஞ் சிறப்பானது, இல்லை——.

7. போய்ப் பத்து.

(பொய்ம்மையாகிய பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரறிவினோ னினிது வாழாமை பொய். 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம் — கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், பெருமை அறிவினோன்—சிறந்த அறிவுடையவன், இனிது—சுகமாக, வாழாமை—வாழாதிருத்தல், பொய்—பொய்யாம்.

பெருஞ்சீ ரோன்றன் வெகுளியின்மை பொய். 2

(ப—ரை.) பெரு சீரோன் — பெருஞ் சிறப்பிற் கேதுவாகிய செல்வமுடையவன், வெகுளி இன்மை—கோபமில்லா திருத்தல், பொய்—.

கள்ளுண் போன்சோர் வின்மை பொய். 3

(ப—ரை.) கள் உண்போன் — கள்ளைக் குடிப்பவன், சோர்வு இன்மை—சோர்வில்லாதிருத்தல், பொய்—.

கால மறியாதோன் கைத்துறல் பொய். 4

(ப—ரை.) காலம் அறியாதோன்—சமயமறிந்து நடவாதவன், கைத்து உறல்—கருமமுடித்தல், பொய்—.

மேல்வர வறியாதோன் தற்காத்தல் பொய். 5

(ப—ரை.) மேல்வரவு அறியாதோன்—இனி வரத்தக்கதை அறியாதவன், தன் காத்தல்—தன்னைக் காத்துக்கொள்ளுதல், பொய்—.

உறுவினை காய்வோ னுயர்வுவேண்டல் பொய். 6

(ப—ரை.) உறு வினை — (பயன்) தருங்காரியத்தை, காய்வோன் — (செய்யாது) வெறுப்பவன், உயர்வு—மேன்மையை, வேண்டல்—விரும்புதல், பொய்—.

சிறுமைநோ னுதான் பெருமைவேண்டல் பொய்.

(ப—ரை.) சிறுமை நோனுதான் — (பொருள் தேடுமிடத் துண்டாகும்) வருத்தத்தைப் பொறுக்காதவன், பெருமை — (பொருளினலுண்டாகும்) பெருமையை, வேண்டல்—விரும்புதல், பொய்—.

பெருமைநோ னுதோன் சிறுமைவேண்டல் பொய்.

(ப—ரை.) பெருமை—(பிறர் தனக்குச் செய்யும்) மேன்மையை, நோனுதோன் — (விரும்பி) மேற்கொள்ளாதவன், சிறுமை — இழிவை, வேண்டல்—விரும்புதல், பொய்—.

பொருணசைவேட்கையான் முறைசெயல் பொய்.

(ப—ரை.) பொருள்—செல்வத்தில், நசை வேட்கையான்—மிகுந்த விருப்பமுடையவன், முறை செயல் — ஒழுங்கான காரியத்தைச் செய்தல், பொய்—.

வாலிய னல்லாதோன் றவஞ்செய்தல் பொய். 10

(ப—ரை.) வாலியன் அல்லாதோன்—(மனத்) தூய்மையில்லாதவன், தவம் செய்தல்—தவத்தைச் செய்தல், பொய்—.

8. எளிய பத்து.

(எளியவான பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
புகழ்வெய் யோர்க்குப் புத்தேளு டெளிது. 1

(ப-ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல் சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், புகழ்—கீர்த்தியை, வெய்யோர்க்கு—விரும்புகின்றவர்களுக்கு, புத்தேள் நாடு—தேவருலகம், எளிது—(அடைதல்) சுலபமாம்.

உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது. 2

(ப-ரை.) உறழ்—(யாவரோடும்) பகைக்கின்ற, வெய்யோருக்கு—கொடியவர்க்கு, உறு—நேரிடுகின்ற, செரு-சண்டை, எளிது——.

ஈரம்வெய் யோர்க்கு நசைகொடை யெளிது. 3

(ப-ரை.) ஈரம்—(பிராணிகளிடத்து) அன்பு, வெய்யோர்க்கு—மிகுதியாக வுடையவர்களுக்கு, (பிறர் விரும்பிய தொன்றை) நசை—விருப்பத்தோடு, கொடை—கொடுத்தல், எளிது——.

குறளைவெய் யோர்க்கு மறைவிரி யெளிது. 4

(ப-ரை.) குறளை—கோட்சொல்லும், வெய்யோர்க்கு—கொடியவருக்கு, மறை—இரகசியத்தை, விரி—வெளியிடுதல், எளிது——.

துன்பம் வெய்யோர்க் கின்ப மெளிது. 5

(ப-ரை.) துன்பம்—துன்பத்தை, வெய்யோர்க்கு—விரும்பியவர்க்கு, இன்பம்—சுகமுண்டாதல், எளிது——.

இன்பம்வெய் யோர்க்குத் துன்ப மெளிது. 6

(ப-ரை.) இன்பம் வெய்யோர்க்கு—இன்பத்தையே விரும்புவோர்க்கு, துன்பம்—துன்பமுண்டாதல், எளிது——.

உண்டி வெய்யோர்க் குறுபிணி யெளிது. 7

(ப-ரை.) உண்டி — (மிகுதியும்) சாப்பாட்டில், வெய்யோர்க்கு—பிரியமுடையவருக்கு, உறு பிணி—வரத்தக்க நோய், எளிது——.

பெண்டிர்வெய் யோர்க்குப் படுபழி யெளிது. 8

(ப-ரை.) பெண்டிர்—(பிற) மகளிரிடத்து, வெய்யோர்க்கு—(மிக) விருப்பமுள்ளவர்களுக்கு, படு பழி—உண்டாகும் பழி (நிந்தை), எளிது——.

பாரம்வெய் யோர்க்குப் பாத்தூ ணெளிது. 9

(ப—ரை.) பாரம்—(தாம் செய்தற்குரிய) கடமையை, வெய்யோர்க்கு—விரும்பியவர்க்கு, பாத்து—(தம்மிடத்துள்ள பொருளைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்பவர்க்குப்) பகுத்து, ஊண்—(பின்னர்) உண்ணுதல், எளிது—.

சார்பி லோருக் குறுகொலை யெளிது. 10

(ப—ரை.) சார்பு—(போர்முகத்து) உதவிபுரிவோர், இல்லோருக்கு—இல்லாதவருக்கு, உறு—நேரிடுகின்ற, கொலை—கொலை, எளிது—.

9. நல்கூர்ந்த பத்து.

(வறுமையுடைய பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
முறையி லரசனுடு நல்கூர்ந் தன்று. 1

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல்சூழ்ந்த உலகத்துள்ள மக்களியாவருக்கும், முறை இல்—நீதியில்லாத, அரசன் நாடு—அரசனது தேசம், நல்கூர்ந்தன்று—வறுமை யுடையதாம்.

மிகமூத்தோன் காம நல்கூர்ந் தன்று. 2

(ப—ரை.) மிக மூத்தோன்—வயதால் மிகவும் மூத்தவன், காமம்—காம இன்பத்தை (விரும்புதல்), நல்கூர்ந்தன்று—.

செற்றுட னுறைவோனைச் சேர்தனல் கூர்ந்தன்று.

(ப—ரை.) செற்று—பகைத்து, உடன் உறைவோனை—தன்னுடன் வசிக்கின்றவனை, சேர்தல்—சேர்ந்திருத்தல், நல்கூர்ந்தன்று—.

பிணிகிடந் தோன்பெற்ற வின்பநல் கூர்ந்தன்று.

(ப—ரை.) பிணி கிடந்தோன்—பிணியால் (வருந்திப் பாயிற்) கிடந்தவன், பெற்ற—(உணவு முதலியவற்றால்) அடைந்த, இன்பம்—சுகம், நல்கூர்ந்தன்று—.

தற்போற் றாவழிப் புலவிநல் கூர்ந்தன்று. 5

(ப—ரை.) தன் போற்றாத வழி—(ஒருவன்) தன்னைப் பாதுகாத்துக் கொள்ளாத விடத்து, புலவி—பிறரொடு மாறுகொள்ளுதல், நல்கூர்ந்தன்று—.

முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று.

(ப—ரை.) முதிர்வு உடையோன் — கிழப்பருவ முடையவன், மேனி — உடம்பின்கண் (தரித்த,) அணி — ஆபரணம் (அவனுக்கு,) நல்கூர்ந்தன்று—.

சொற்செல் லாவழிச் சொலவுநல் கூர்ந்தன்று. 7

(ப—ரை.) சொல்—(ஒருவன் தனது) சொல், செல்லாத வழி—செல்லாதவிடத்து, சொலவு—(தன் குறையைச்) சொல்லுதல், நல் கூர்ந்தன்று—.

அகம்வறி யோனண்ண னல்கூர்ந் தன்று. 8

(ப—ரை.) அகம்—மனத்தின்கண், வறியோன்—அன்பில்லாதவனை, நண்ணல்—(ஒருவன் சிநேகிதமாக) அடைதல், நல்கூர்ந்தன்று—.

உட்கில் வழிச்சின நல்கூர்ந் தன்று. 9

(ப—ரை.) உட்கு—(தன்னைக்கண்டு பிறர்) அஞ்சுதல், இல் வழி—இல்லாதவிடத்து, சினம்—(ஒருவன்) கோபித்தல், நல்கூர்ந்தன்று—.

நட்பில் வழிச்சேற னல்கூர்ந் தன்று. 10

(ப—ரை.) நட்பு இல்—(தனக்குச்) சிநேகித ரில்லாதவிடத்து, சேறல்—(ஒருவன்) செல்லுதல், நல்கூர்ந்தன்று—.

10. தண்டாப் பத்து.

(நீங்காத பத்து விஷயங்கள்.)

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓங்கல் வேண்டுவோ னுயர்மொழி தண்டான்.

(ப—ரை.) ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்—கடல்சூழ்ந்த வுலகத்துள்ள மக்களியாவருள்ளும், ஓங்கல் — (மேன்மேலும்) விருத்தியாதலை, வேண்டுவோன் — விரும்புகின்றவன், உயர் மொழி — (அறிவுடையோர் கூறும்) உயர்வாகிய சொற்களை, (மறுக்காது கேட்டலினின்றும்), தண்டான்—நீங்கான்.

வீங்கல் வேண்டுவோன் பலபுகழ் தண்டான். 2

(ப—ரை.) வீங்கல் வேண்டுவோன்—(எவ்விடத்துந் தனது பெயர்) பரவுதலை விரும்புகிறவன், பல புகழ்—பலவகைப்பட்ட புகழினின் றும், தண்டான்—.

கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான். 3

(ப—ரை.) கற்றல்—(நல்லாசிரியரிடத்து நல்ல நூற்களைப்) படித் தலை, வேண்டுவோன்—விரும்புகிறவன், வழிபாடு—(அவரை) வழி படுதலினின்றும், தண்டான்—.

நிற்றல் வேண்டுவோன் றவஞ்செய றண்டான்.

(ப—ரை.) நிற்றல்—(வெகுகாலங் தனது சரீரங் கெடாது) நிலை பெறுதலை, வேண்டுவோன்—விரும்புபவன், தவஞ்செயல்—தவஞ்செய் தலினின்றும், தண்டான்—.

வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்.

(ப—ரை.) வாழ்க்கை—(செவ்வையாக) வாழ்தலை, வேண்டுவோன்—மேன்மேலும் விரும்புபவன், சூழ்ச்சி – (அதற்குரிய) ஆலோசனையி னின்றும், தண்டான்—.

மிகுதி வேண்டுவோன் றகுதி தண்டான். 6

(ப—ரை.) மிகுதி—(தேகப்) பொலிவை, வேண்டுவோன்—விரும் புபவன், தகுதி—(அதற்குத்) தகுதியாகவுள்ள உணவுமுதலியவற்றி னின்றும், தண்டான்—.

இன்பம் வேண்டுவோன் றுன்பந் தண்டான். 7

(ப—ரை.) இன்பம்—(முன்னே) இன்பத்தை, வேண்டுவோன்—விரும்புபவன், துன்பம்—(பின்னே) துன்பமடைதலினின்றும், தண் டான்—.

துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான். 8

(ப—ரை.) துன்பம் – (முன்னே) துன்பத்தை, வேண்டுவோன்—விரும்புபவன், இன்பம்—(பின்னே) இன்பத்தினின்றும், தண்டான்—.

ஏமம் வேண்டுவோன் முறைசெயல் தண்டான். 9

(ப—ரை.) ஏமம்—(தனக்குக்) காவலை, வேண்டுவோன்—விரும்பிய அரசன், முறைசெயல்—(நீதிநூல்களிற் கூறிய) முறைப்படி அரசாட்சி நடத்துதலை, தண்டான்—.

காமம் வேண்டுவோ னின்பந் தண்டான். 10

(ப—ரை.) காமம் வேண்டுவோன்—மகளிரது ஆசையை விரும்பு கின்றவன், இன்பம்·(அம்மகளிரால் உண்டாகும்) இன்பத்தினின் றும், தண்டான்—.

நீதிநெறி விளக்கம்

நீரிற் குமிழி யிளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்;—நீரில்
எழுத்தாகும் யாக்கை: நமரங்காள், என்னே!
வழுத்தாத தெம்பிரான் மன்று.

(பதவுரை.) இளமை—இளமைப்பருவம், நீரில் – நீரிலுண்டாகும், குமிழி (ஆகும்)—குமிழிபோல நிலையில்லாததாகும்; நிறைசெல்வம்—குறைவில்லாத செல்வம், நீரில்—நீரினிடத்து, சுருட்டும்—(காற்றினால்) சுருட்டப்படும், நெடு திரைகள் (ஆகும்)—நெடுமையாகிய அலைகள் போல நிலையில்லாததாகும்; யாக்கை—உடம்பு, நீரில் – நீரிலெழுதிய, எழுத்து ஆகும்—எழுத்துப்போல நிலையில்லாததாகும்; (ஆதலால்) நமரங்காள்—நம்மவரே, எம்பிரான்—நம் கடவுளுடைய, மன்று—சபையை, வழுத்தாதது—துதியாமலிருப்பது, என்னே—யாது காரணமோ!

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும்: கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

(ப—ரை.) அறம்—தருமத்தையும், பொருள்—செல்வப்பொருளையும், இன்பமும்—இன்பத்தையும், வீடும்—மோட்சத்தையும், பயக்கும்—கொடுக்கும்; புறங்கடை – தலைவாயிலில், நல் இசையும் – குற்றமில்லாத கீர்த்தியையும், நாட்டும்-நிலைபெறச் செய்யும்; உறும் – வரவேண்டியதாகிய, கவல் ஒன்று—ஒரு கவலை, உற்ற உழியும்—நேரிட்டவிடத்தும், கைகொடுக்கும்—உதவிசெய்யும்; (ஆதலால்) சிறு உயிர்க்கு—சில வாழ்நாளையுடைய உயிர்களுக்கு, உற்ற துணை—நீங்காத துணை, கல்வியின் ஊங்கு—கல்வியினும் மேற்பட்டது, இல்லை—இலதாம்.

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்;
மடங்கொன் றறிவகற்றும், கல்வி:—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின், முற்றிழாய்!
பிற்பயக்கும் பீழை பெரிது. 2

(ப—ரை.) முற்றிழாய் — தொழில் முடிந்த ஆபரணத்தையுடையாளே! கல்வி—கல்வியானது, தொடங்குங்கால்—(தன்னை) ஆரம்பிக்குங் காலத்தில், துன்பம் ஆய்—துக்கத்தைத் தருவதாகி, இன்பம்—சுகத்தை, பயக்கும் — (பின்) தரும்; (அல்லாமலும்) மடம் — அறியாமையை, கொன்று—இல்லாமற்செய்து, அறிவு—அறிவை, அகற்றும்—விசாலமாக்கும்; நெடு காமம்—பெருங்காமமானது, முன்—ஆரம்பத்தில், பயக்கும்—கொடுக்கிற, சின் (மை) நீர—அற்பத்தன்மையுள்ள, இன்பத்தின்—சுகத்தைப்பார்க்கிலும், பின்—பின்பு, பயக்கும்—கொடுக்கின்ற, பீழை—துக்கம், பெரிது—மிகுந்ததாகும்.

கல்வியே கற்புடைப் பெண்டிர், அப் பெண்டிற்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்,-சொல்வளம்
மல்லல்வெறுக்கையா, மாணவை மண் ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு. 3

(ப—ரை.) கல்வியே — கற்றகல்வியே, கற்பு உடைய — கற்பையுடைய; பெண்டிர் (ஆக) — மனைவியராகவும், அப்பெண்டிர்க்கு—அம் மனைவியர்க்கு, ஈர் கவியே—இனிமையாகிய செய்யுளே, செல்வப்புதல்வன் ஆக—செல்வப்புத்திரனாகவும், சொல்வளம் (ஏ)—(கேட்போர்க்குப் பொருள் அறிவுறுத்துகின்ற) சொல்லினது வளப்பமே, மல்லல்—மிகுதியாகிய, வெறுக்கை ஆக—பொருளாகவும், (இருத்தலும் அல்லாமல்) சிலர்க்கு—சிலருக்கு, மாண் அவை—(கல்வியறிவு கேள்விகளால்) மாட்சிமைப்பட்ட சபையினரை, மண் உறுத்தும்—அலங்காரப்படுத்தவல்ல, செல்வமும் உண்டு—செல்வமும் உளதாம்.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்;—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மையின்றெனி னென்னும்? அஃதுண்டேல்,
பொன்மலர் நாற்ற முடைத்து. 4

(ப—ரை.) எத்துணைய ஆயினும்—எவ்வளவின ஆனாலும், இடம் அறிந்து — நல்ல ஆசிரியனைத் தெரிந்து, கல்வி — கல்விகளை, உய்த்து உணர்வு — ஆராய்ந்து அறிதல், இல் எனின் — இல்லையானால், இல் ஆகும் — (அக்கல்விகள்) இல்லையாம்; உய்த்து உணர்ந்தும் — அவ்வாறு ஆராய்ந்தறிந்தும், சொல் வன்மை — (பிறருக்கு ஏற்கச் சொல்லும்) சொல்லினது வன்மை, இன்று எனின்—இலதானால், என் ஆம்—என்ன பயன்படும்? அஃது உண்டேல்—அச்சொல்வன்மையும் உளதானால், பொன் மலர்—பொன்னாற்செய்தமலர், நாற்றம்—உடைத்து—மணமுடையதுபோலாம்.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும், கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்,—நவையஞ்சி
ஈத்துண்ணா செல்வமும், நல்கூர்ந்தா ரின்னலமும்,
பூத்தலிற் பூவாமை நன்று. 5

(ப—ரை.) அவை—(கற்றவர் கூடிய) சபையை, அஞ்சி—பயந்து, மெய் விதிர்ப்பார் — உடம்பு நடுங்குவோருடைய, கல்வியும் — கல்வியறிவும், கல்லார்—மூடர்களுடைய, அவை அஞ்சா(த)—சபையை அஞ்சாத, ஆகுலச்சொல்லும் — ஆரவாரமாகியசொல்லும், நவை அஞ்சி—(பொருள்தேடுங் காலத்தில் பழிபாவங்களாகிய) குற்றத்திற்குப் பயந்து, ஈந்து—(இரப்பவர்க்குக்) கொடுத்து, உண்ணா—(தாமும்) அநுபவியாதவருடைய, செல்வமும்—செல்வப்பொருளும், நல்கூர்ந்தார்—தரித்திருடைய, இன்நலமும்—(ஈகைக்குணமுதலிய) இனிமையாகிய நல்ல தன்மையும், பூத்தலின்—உண்டாயிருப்பதினும், பூவாமை—உண்டாகாமையே, நன்று—நல்லது.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கோவ்வான்;—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 6

(ப—ரை.) வள் தமிழோர்—வளமாகிய தமிழ்ப்புலவர், செய்யும்—படைக்கின்ற, மற்று உடம்பு—(செய்யுள்களாகிய) உடம்புகள், புகழ் கொண்டு—புகழை அடைந்து, மலரவன் செய்—பிரமன் படைத்த, வெறு உடம்பு — பயன்படாத உடம்புகள், மாய்வனபோல — அழிவனபோல, மாயா—அழிவன அல்ல; (ஆதலால்) கலைமகள்—சரசுவதியினது, வாழ்க்கை — வாழ்க்கையானது, முகத்தது எனினும் — முகத்தினிடத்ததாயினும், மலரவன் — அப்பிரமன், இவர்க்கு — இத்தமிழ்ப்புலவர்க்கு, ஒவ்வான்—ஒப்பாகான்.

நெடும்பகல் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே;
தீதென்று நீப்பரி தால். 7

(ப—ரை.) நெடு பகல்—பலநாள், கற்ற—கற்கப்பட்ட நூற்பொருள்கள், அவையத்து —(கற்றுவல்லோர் கூடிய) சபையினிடத்து, உதவாது—ஞாபகத்துக்குவராமல், உடைந்துள்ளார் — (தம்மோடு வாதிப்பவ

ருக்குத்) தோற்றவாது, உட்குவரும்—நாணம் உண்டாக்கும், கல்வி—கல்வியானது, தீது என்று—கொடியதென்று, நீப்பு அரிது—நீக்குதல் கூடாது; (ஆதலால்) கடு பகல் — நடுப்பகலில், ஏதிலான்பால் — அயலானிடத்து, கண்ட—(இருக்கக்) கண்ட, இல்லினும்—தம்மனையாளினும், பொல்லாதே—கொடியதே.

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். 8

(ப—ரை.) தாம் — தாங்கள், வருந்தி — வருத்தப்பட்டு, கற்றன—கற்றநூற்பொருள்களை, ஓம்பாது —(சிந்தித்தல் முதலானவற்றால்) பாதுகாக்காமல், மற்று சில உம்—வேறு சில நூல்களையும், பரிந்து—வருந்தி, கற்பான் — கற்க, தொடங்கல் — ஆரம்பித்தல், கைத்தலத்த—கையிலுள்ளன ஆகிய, கரு தனம் — மிக்கபொருள்களை, உய்த்து — தாங்கிக்கொண்டுபோய், சொரிந்திட்டு—எறிந்து, ஆங்கு—எறிந்த இடத்தில், அரிப்பு அரித்து—அரிப்புத் தொழில்செய்து (அதாவது அரித்து), எய்த்து — இளையாநின்று, பொருள் செய்திடல் — பொருள் சேர்த்தல் போலாம்.

எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம்;—மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். 9

(ப—ரை.) மனை — இல்வாழ்க்கைக்கு, தக்காள் — தகுந்தவளாகிய மனைவி, மாண்பு — நற்குண நற்செய்கை, இலள் ஆயின் — இல்லாதவளானால், மணமகன்—கணவன், பூண்ட—மேற்கொண்டன ஆகிய, நல் அறம்—நல்ல தருமங்கள், புலப்படாபோல்—விளங்காதனபோல, இலம்பாட்டார்—தரித்திரருடைய, கல்வி—கல்விகள், எனைத்துணைய எனும்—எவ்வளவு மிகுதியுடையன ஆனாலும், தினைத்துணையும்—தினையளவும், சீர்ப்பாடு—சிறப்புண்டாதல், இல ஆம்—இல்லையாம்.

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமோன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா;—என்சொலினும்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்:
பித்துடைய வல்ல பிற. 10

(ப—ரை.) இன் சொல்லன் — இனிமையாகிய சொல்லையுடையா னும், தாழ் நடையன்—(தகுந்தவருக்கு) அடங்கி நடக்கும் ஒழுக்கமுடை யானும், ஆயினும்—ஆனாலும், ஒன்றும் இல்லான் எல்—பொருள் சிறி தும் இல்லானாயின், கடல் ஞாலம்—கடலாற் சூழப்பட்ட உலகத்துள் ளார், வல் சொல்லின்—(அவன் முகநோக்கிக்) கடுஞ்சொல் சொல்லுதலி னின்றும், அல்லது—இன்சொல் சொல்லுதற்கு, வாய் திறவா—வா யைத்திறவார்கள்; என் சொ(ல்)லினும்—கடுஞ்சொல்லைச் சொல்லினும், கைத்து உடையான் — பொருளுடையானது, கால்கீழ் — காலின் கீழ், ஒதுங்கும்—அடங்கி நடப்பார்கள்; (ஆதலால்) பித்து—பைத்திய குணத் தை, உடைய—உடையார்கள், பிற—நற்குணங்களையுடையோர், அல்ல— அல்லர்.

இவறன்மை கண்டு முடையாரை யாரும்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப;—பெரிதுந்தாம்
முற்பக லோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. 11

(ப—ரை.) இவறன்மை — உலோபத்தன்மை யுடையராயிருத்தலை, கண்டும் — அறிந்தும், உடையாரை — செல்வமுடையவர்களை, யாரும்— எல்லாரும், குறை—குறையாகிய பொருளை, இரந்து—யாசித்து, குறு ஏவல் உம்—(அவர்) ஏவின சிறுதொழில்களையும், செய்ப—செய்வார் கள்; முன் பகல்—முன்னாளில், பெரிதும்—மிகுதியும், நோலாதார்— தவஞ்செய்யாதவர், நோற்றாரை—தவஞ்செய்தவரை, பின் செல்லல்— பின்செல்லுதல், கற்பு அன்றே—அறிவே ஆம்; கல்லாமை அன்று— அறியாமை அன்று.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்;—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா; யாரே
அழகுக் கழகுசெய் வார்? 12

(ப—ரை.) கற்றோர்க்கு — கற்றுணர்ந்தவருக்கு, கல்வி நலனே—கல்வி யாலாகிய அறிவே, கலன் அல்லால்—ஆபரணம் அல்லாமல், மற்று ஓர் அணிகலம் — வேறோராபரணம், வேண்டா — வேண்டப்படுவதில்லை; முழு மணி—பெருமணிகளால் செய்யப்பட்ட, பூணுக்கு—ஆபரணத்து க்கு, பூண்—வேறாபரணம், முற்ற—ஒருகாலத்திலும், வேண்டா—வேண் டப்படுவதில்லை; யாரே—எவர்தாம், அழகுக்கு—அழகினுக்கு, அழகு செய்வார்—அழகு செய்பவர்? (எவருமில்லை.)

முற்று முணர்ந்தவ ரில்லை; முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க;—சிற்றுளியால்
கல்லுந் தகரும்; தகரா, கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால். 13

(ப—ரை.) கனங்குழாய்—கனமாகிய காதணியையுடையாளே! முற்றும்—எல்லாம், உணர்ந்தவர்—அறிந்தவர், இல்லை—இலர்; (ஆதலால்) முழுவதும்—எல்லாம், கற்றனம் என்று—படித்தறிந்தோமென்று, களியற்க—செருக்குக் கொள்ளாதே; கல்லும்—மலைகளும், சிறு உளியால்—சிறிய உளியினால், தகரும்—உடையும்; கொல்—கொல்லனுடைய, உலை—உலைக்களத்துள்ள, கூடத்தினால்—சம்மட்டியினால், தகரா—உடையா.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க;—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று. 14

(ப—ரை.) தம்மின்—தம்மினும், மெலியாரை—எளியவரை, நோக்கி—பார்த்து, தமது உடைமை—தம்முடைய பொருள், அம்ம—ஆச்சரியம், பெரிது என்று—அதிகமானதென்று, அகம் மகிழ்க—மனமகிழ்க; தம்மினும்—தம்மைப்பார்க்கினும், கற்றாரை—படித்தறிந்தவர்களை, நோக்கி—பார்த்து, நாம் கற்றது எல்லாம்—நாம் கற்றதுமுழுதும், இவர்க்கு—இவரது கல்விக்கு, எற்றே என்று—எத்தன்மையதாமென்று கருதி, கருத்தழிக—மனம் வருந்துக.

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்;—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். 15

(ப—ரை.) இல்லார்—(கல்வியும்பொருளும்) இல்லாதவர், குறை—தமது குறைகளை, இரந்து—சொல்லியாசித்து, தம் முன்னர்—தம்மெதிரில், நிற்பபோல்—(தலைவணங்கி) நிற்பார்போல, தாமும்—அவ்விருவகைச்செல்வமுடையாரும், தலை வணங்கி—தலையால் வணங்கி, தாழப் பெறின்—தாழ்ந்திருத்தலைப் பெறுவாராயின், கல்வி உடைமை—கல்வியையுடையராதலும், பொருள் உடைமை—பொருளுடையராதலும், என்று இரண்டு செல்வமும்—என்று (கூறப்படுகின்ற) இரண்டு

செல்வங்களும், செல்வம் எனப்படும்—(உண்மையில்). செல்வங்களே என்று (அறிவுடையோரால்) சொல்லப்படும்.

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப;—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. 16

(ப—ரை.) ஆக்கம் பெரியார்—(கல்வி அல்லது பொருள் ஆகிய) செல்வம் மிகுந்தவர், சிறியாரிடை—(அவ்விருசெல்வமும்) குறைந்தவரிடத்து, பட்ட—உண்டாகிய, மீச்செலவு—வரம்புகடந்த நடக்கையை, காணின்—கண்டால், நனிதாழ்ப—மிகுதியுந் தாழ்வார்கள்; தூக்கின்—உயர்த்துப் பிடித்தால், துலைக்கு — தராசில், மெலியது — இலேசான பொருளுள்ள தட்டு, மேல்மேல்—மிகமேலே, எழ—எழும்படி, செல்லச்செல்ல—உயருந்தோறும், வலிது அன்றே—கனமான பொருளுள்ள தட்டே, தாழும்—தாழுகின்றது.

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையுந் தீதே:—புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின். 17

(ப—ரை.) புலப்பகையை—ஐந்துவிடயமாகிய பகையை, வென்றனம் – செயித்தோம், நல் ஒழுக்கில் – நல்லொழுக்கத்தில், நின்றேம் என்று—தவறாமல் நின்றேமென்று, தம்பாடு—தம்பெருமையை, தம்மில் கொளின் – தமக்குள் மதித்துக்கொள்வாராயின், விலக்கிய—(அறநூல்களால்) விலக்கின கருமங்களை, ஓம்பி—செய்யாமற்காத்து, விதித்தனவே – விதித்த கருமங்களையே, செய்யும் – செய்தற்குரிய, நலத்தகையார் – நன்மையாகிய தன்மையுடையாரது, நல்வினையும் – நல்ல கருமமும், தீதே—பயனில்லாததே ஆகும்.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்தல், தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ(து); இன்பம்
நயவாமை யன்றே நலம். 18

(ப—ரை.) தன்னை வியப்பிப்பான்—தன்னை (யாவரும்) உயர்வாக மதிக்க நினைப்பவன், தன் புகழ்தல் – தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல், நல் நீர்—குளிர் நீரை, சொரிந்து—(அகலில்) வார்த்து, தீச்

சுடர்—தீவிளக்கை, வளர்த்(த)து அற்று—எரித்தது போலும்; (ஆதலால்) தன்னை—தன்னை, வியவாமை அன்றே—உயர்வாக மதியாதிருத்தலே, வியப்பாவது—மதிப்பென்பது; இன்பம்—ஒரு சுகத்தையும், நயவாமை அன்றே—விரும்பாமையே, நலம்—இன்பமென்பது.

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு:—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல். 19

(ப—ரை.) பிறரால்—மற்றவரால், பெரு சுட்டு—உயர்வாக மதித்தலை, வேண்டுவான்—(தான் அடைய) விரும்புவோன், யாண்டும்—மறக்கத்தக்க காரணம் உண்டான இடத்தும், மறவாமே—மறவாமல், நோற்பது ஒன்று—ஆசரிப்பதாகிய ஒரு கருமம், உண்டு—உளது; (அது) பிறர் பிறர்—மற்றவருடைய, சீர் எல்லாம்—சிறந்த ஒழுக்கங்களை எல்லாம், தூற்றி—பலர் அறியச்சொல்லி, சிறுமை—(அவர்களது) தீய ஒழுக்கத்தை, புறம்காத்து—வெளிப்படுத்தாமல், யார் யார்க்கும்—எல்லோர்க்கும், தாழ்ச்சி—பணிவான சொற்களை, சொலல்—சொல்லுதலாம்.

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை;—சோற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல். 20

(ப—ரை.) கற்று—நூல்களைக் கற்றறிந்து, பிறர்க்கு—மற்றவர்க்கு, உரைத்து—(நல்லொழுக்கத்தைக்) கற்பித்து, நில்லார்—(அவ்வொழுக்கத்தில்) நில்லாதவருடைய, வாய்—வாயினிடத்து, படும்—உண்டாகும், வெறு உரைக்கு—பயனில்லாத சொல்லுக்கு, ஓர் வலியுடைமை—ஒருவல்லமையைக் கொண்டிருத்தல், உண்டு—உளது; (அது) சொற்ற நீர்—(எமக்கு நல்லொழுக்கத்தைச்) சொல்லிய நீர், நில்லாதது—(அவ்வொழுக்கத்தில்) நில்லாத காரணம், என் என்று—என்ன என்று, நாண்—வெட்கம், உறைப்ப—வருத்த, ஒருவன் நேர்ந்து—ஒருவன் எதிர்த்து, சொல்லாமே—சொல்லாதபடி, சூழ்ந்து—ஆலோசித்துக்கொண்டு, சொல்லல்—சொல்லுதலாம்.

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்;—திறப்படூஉம்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். 21

(ப-ரை.) தாம் கற்ற – தாம் கற்ற கல்வியறிவாலமையும் செய்யுள்களை, பிறர்க்கு – அந்நியர்க்கு, பயன்பட – பிரயோசனப்படும்படி, விற்பார்–(பொருளுக்காக) விற்கும் புலவர்கள், தமக்கு–தங்களுக்கு, வேறு பயன்–வேறுபலனை, உடையார்–உடையராவர்; (அது) திறம்படும்–வகைப்பட்ட, தீவினை – கொடுந்தொழிலுக்கு, அஞ்சாத–பயப்படாத, விறல் கொண்டு – வலியை அடைந்து, தென்புலத்தார் – பிதிர் தேவதைகளுக்கு, கோவினை – அரசனாகிய யமனை; வேலை கொளல்–தொழில்கொள்ளுதலாம், (அதாவது தம்மைத் தண்டிக்கச் செய்து கொள்ளல்).

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே, மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல். 22

(ப-ரை.) கற்பன–கற்பதற்குரிய கல்விகளுக்கு, ஊழ்–நல்வினை, அற்றார் – இல்லாதவர், கல்விக் கழகத்து – கல்வியைப் பயிலும் இடத்தில் (அதாவது புலவர் சபையில்), ஒற்கம்–அடக்கம், இன்று–இல்லாமல், ஊத்தை வாய்–அழுக்குப்படிந்த வாயை, அங்காத்தல்–திறத்தலானது, மா–மிருகங்களும், பறவை – பட்சிகளும், புல் உரு – புல்லாற் செய்யப்பட்ட உருவத்தை, அஞ்சுவபோல்–(பார்த்துப்) பயப்படுவன போல, மற்றுத்தம்–கல்லாத தம்முடைய, வல் உரு–வலிய உருவத்தை, அஞ்சன்மின்–அஞ்சாதிரும், என்பவே – என்று சொல்வனவே ஆம்.

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா;—தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தேனினும் பேண்ணலம்
பேடு கொளப்படுவ தில். 23

(ப-ரை.) போக்கு – குற்றம், அறு – இல்லாத, கல்வி – கல்விகள், புலம் –அறிவில், மிக்கார்பால் –மிகுந்தவரிடத்து, அன்றி – அல்லாமல், நகை மீக்கொள்வார்வாய் – (விளையாட்டிற் காலங்கழித்துச்) சிரித்தலை மேற்கொள்ளும் இயல்பினரிடத்து, சேரா–சேர்ந்து பயன்தரா; (எது போல எனின்) தாக்கு – தீண்டி வருத்துகின்ற, அணங்கும் –தெய்வப்

பெண்ணும், ஆண்—ஆண்தன்மையை, அவாம் — விரும்புதற் கேதுவாகிய, பெண்மை—பெண்தன்மையாகிய அழகு, உடைத்து எனினும்—(ஒரு பெண்ணை) உடையதாக இருப்பினும், பெண் நலம் — அப்பெண்ணின் அழகு, பேடு—அலியால், கொள்ளப்படுவது இல் — (அறிந்து) கொள்ளப்படுவதில்லை (அதுபோல).

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றந் தமதே பிறிதன்று;—முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்? 24

(ப—ரை.) கற்றன—கற்ற நூற்பொருள்களை, கல்லார் — மூடருடைய, செவி—காதில், மாட்டி — நுழைத்து, கை உறும் — (அவரால்) அவமதிக்கப்படுதற்குக் காரணமாகிய, குற்றம் — பிழையானது, தமதே — தம்முடையதே, பிறிது அன்று — வேறன்று (அதாவது மூடருடைய தன்று. ஆதலால்), முற்றும் உணர்ந்தும் — முழுவதுந் தெரிந்திருந்தும், அவர் தன்மை — அம்மூடருடைய தன்மையை, உணராதார் — அறிந்துகொள்ளாத்தாம், தம் உணராத—தம்மை அறியாத, ஏதிலரை—அயலாரை, நோவது — வெறுத்துக்கொள்ளல், எவன் — என்ன?

வேத்தவை காவார் மிகன்மக்கள்; வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்:—மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை; புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு. 25

(ப—ரை.) பூஞை — பூனையானது, மாத்தகைய — பெருந்தகுதியையுடைய, அந்தப்புரத்தது — அந்தப்புரத்திலுள்ளதாயினும் (சிறப்படையாது); கந்து — கட்டுத்தறியை, கொல்—முறிக்கின்ற, பூட்கை—வலியையுடைய, களிறு—யானை, புறங்கடைய — தலைவாயிலிலிருப்பினும் (சிறப்படையும்); (அதுபோல) மிகல் மக்கள் — மேலோர், வேந்து அவை—இராஜசபையை, காவார் — காத்துக்கொண்டிரார் (ஆயினும் சிறப்படைவர்); வேறு சிலர்—(அவரின்) வேறாகிய கீழோர், காத்ததுகொண்டு—(அச்சபையைக்) காத்திருந்ததனால் கிடைத்த பொருளால், உவப்பு—மகிழ்ச்சியை, எய்தார்—அடையார்.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே; மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்; அறவோர்க்
கடிகளே தெய்வம்; அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை. 26

(ப—ரை.) குலமகட்கு—குலதர்மத்தையுடைய பெண்ணுக்கு, தெய்வம்—தெய்வம், கொழுநனே — தன்கணவனே; புதல்வர்க்கு — புத்திரர்களுக்குத் (தெய்வம்), தந்தையும் தாயும் மன்ற—தந்தையுந்தாயுமே; அறவோர்க்கு—(பிரமசரியமுதலிய) தருமநிலையில் நின்றவர்க்கு, தெய்வம்—தெய்வம், அடிகளே—குருவே; அனைவோர்க்கும்—எல்லாருக்கும், தெய்வம்—தெய்வம், இலைமுகம் — வெற்றிலையினது முகம்போலத் தொழில் செய்யப்பட்ட, பைம்பூண்—பசும்பொன் அணி அணிந்த, இறை—அரசனே ஆம்.

கண்ணிற் சொலிச்செவியி ேனாக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும்—தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும்? வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு? 27

(ப—ரை.) வயம்—வெற்றியைத் தரத்தகுந்த, படை—ஆயுதம், ஆண் அல்லவர்க்கு — பேடிகளுக்கு, என் பயக்கும் — என்னபயனைத்தரும்? (அதுபோல) கண்ணின்—கண்ணால், சொல்லி—(தமதெண்ணத்தைத்) தெரிவித்து, செவியின்—காதினால், நோக்கும்—பிறர் செய்தியை அறிந்துகொள்ளும், இறை மாட்சி—அரசச்செல்வம், புண்ணியத்தின்—(முன் செய்த) நல்வினையினது, பாலதே ஆயினும்—வகையையேயுடையதானாலும், தண் அளியால்—தண்மையாகிய அன்பினால், மன்பதை—மனிதர்களை, ஓம்பாதார்க்கு—பாதுகாவாத அரசர்களுக்கு, என் ஆம்—(அவ்வரசச்செல்வம்) என்னபயனுள்ளதாகும்? (ஒரு பயனு முள்ளதாகாது).

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே!—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. 28

(ப—ரை.) குடி—குடிகளை, கொன்று—வருத்தி, இறை — வரியை, கொள்ளும்—வாங்குகின்ற, கோமகற்கு—அரசனுக்கு, கன்று ஆ—கன்றையுடைய பசுவினது, மடி—மடியை, கொன்று—அறுத்து, பால்—பாலை, கொள்ளலும்—பெறுதலும், மாண்பே—நற்செய்கையே! குடி—குடிகளை, ஓம்பி—(வருத்தாமல்) காப்பாற்றி, கொள்ளும் ஆறு—(வரி) வாங்கும் வழியில், கொள்வோர்க்கு—வாங்கும் அரசர்க்கு, மா நிதியம்—பெருந்திரவியம், வெள்ளத்தின் உம்—வெள்ளமென்னும் எண்ணினும், மேல் பல—அதிகமாகப் பல இருத்தலை, காண்டுமே—காண்கின்றோமே.

இன்று கொளற்பால நாளை கொளப்பொருன்;
நின்று குறையிரப்ப நேர்படான்;-சென்ருெருவன்
ஆவன கூறி னெயிறலைப்பான், ஆறலைக்கும்
வேடலன் வேந்து மலன். 29

(ப-ரை.) இன்று-குறித்தநாளில், கொளற்பால - கொள்ளத்தக்க பொருள்களை, நாளை-மறுநாளில், கொள்ள-வாங்கிக்கொள்ள, பொருன்-பொறுக்கமாட்டான்; நின்று-எதிரில் நின்று, குறை-குறைகளை, இரப்ப-யாசித்துக் கேட்டுக்கொள்ள, நேர்படான்-எதிர்படான்; ஒருவன் சென்று-எவனுயினும் போய், ஆவன-தனக்கு வேண்டியவற்றை, கூறின்-கேட்டுக்கொண்டால், எயிறு அலைப்பான்-தன்பல்லைக் கடித்துப் பயமுறுத்துவான்; (இவ்வரசன் காட்டிலிருந்து பறியாமையால்) ஆறு அலைக்கும்-வழிபறிக்கும், வேடு அல்லன்-வேடன் அல்லன்; (குடிகளை முறையாகக் காக்காமையால்) வேந்தும் அல்லன்-அரசனும் அல்லன்.

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணு-இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். 30

(ப-ரை.) (உயிருள்ள சில மனித சரீரங்கள்) முடிப்ப-முடிப்பதற்குரிய மலர்களை, முடித்து-(சிகையில்) முடித்துக்கொண்டும், பின்-பின்பு, பூசுவ-பூசுதற்குரிய பூச்சுகளை, பூசி-பூசிக்கொண்டும், உடுப்ப-உடுத்தற்குரிய ஆடைகளை, உடுத்து-உடுத்துக்கொண்டும், உண்ப-உண்ணுதற்குரிய உணவுகளை, உண்ணு-உண்டும், இடித்திடித்து - பலமுறை நெருக்கி, கட்டுரை-உறுதிமொழிகளை, கூறின்-சொன்னுல், செவி கொள்ளா-காதிற்கொள்ளா, கண் விழியா-எதிரில் நிற்பவர்களைக்) கண்கள் திறந்து பாரா, (ஆதலால் அவை) நெட்டுயிர்ப்போடு-பெருமூச்சையுடையனவாய், உற்ற-கெடாமலுள்ள, பிணம்-பிணங்களாம்.

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்ருே டுணையாத் தெரிதந்தும்-குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை; சென்று
முறையிடினுங் கேளாமை யன்று. 31

(ப-ரை.) ஒற்றின்-வேவுகாரனுல், தெரியா-(உண்மைகள்) அறியப்படா; சிறைப்புறத்து - ஒதுக்கிடத்திலிருந்து, ஓர்தும் என-அறி

வோமென்று, பொன் தோள்—தனது அழகிய தோளே, துணை ஆக—துணையாகப்போய், தெரிதந்தும்—தெரிந்துகொண்டும், குற்றம்—(ஒருவரிடத்துள்ள) குற்றங்களை, அறிவு அரிது என்று—துணிதல் அருமையுடையதென்று, அஞ்சுவதே—பயப்படுவதே, செங்கோன்மை—அரசநீதியாம்; சென்று—(ஒருவன்) போய், முறையிடினும்—குறைகளைச் சொல்லிக்கொண்டாலும், கேளாமை அன்று—காதுகொடாமை அன்று.

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு:—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார்? தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு. 32

(ப—ரை.) நேர் நின்று—எதிரில் நின்று, காக்கை—காகம், வெளிது—வெண்மையுடையது, என்பார்—என்று சாதிப்பவர், என் சொல்லார்—வேறெதைச் சொல்லார்? தாய்க்கொலை—தாயைக் கொல்லுதல், சால்பு உடைத்து – பொருத்தமுடையது, என்பாரும்—என்று சொல்வாரும், உண்டு—(சிலர்) உளர்; (ஆதலால்) ஏதிலார்—அந்நியர், யாதும்—மெய்யையே அல்லாமல் பொய்யையும், புகல—சொல்ல, இறைமகன்—அரசன், கோது – பொய்யாகிய குற்றத்தை, ஒரீஇ—நீக்கி, கொள்கை—(உண்மையை) அறிந்துகொள்ளல், முதுக்குறைவு—பேரறிவாம்.

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சி?மற் றில்லாகும்:—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. 33

(ப—ரை.) மண்டு எரி—மிகுந்த தீயானது, வாய்மடுப்பினும்—சூழ்ந்தெரியினும், மாசுணம்—பெரும் பாம்புகள், பெருமூச்சு எறிந்து—பெருமூச்சுவிட்டுக்கொண்டு, கண் துயில்வ – நித்திரைசெய்வன, பேரா—(தூங்கும் இடம்விட்டு) நீங்காவாம்; (அதுபோல) கேடு—இடுக்கண், கண் கூடாக—கண்ணுக்குத் தோன்றுவதாக, பட்டது எனினும்—பொருந்தியதாயினும், கீழ்மக்கட்கு—கீழ்மக்களுக்கு, உணர்ச்சி—(அக்கேட்டில்நின்றும் ஒழியத்தக்க) அறிவு, உண்டோ—உண்டாகுமோ? மற்று இல் ஆகும்—இல்லையாகும்.

நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையு மையுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி தாதல்:
கெடுவது காட்டுங் குறி. 34

(ப-ரை.) நட்பு-நட்பினரை, பிரித்தல்-பகையாக்கலும், பகை-பகைவரை, நட்டல்-சிநேகித்தலும், ஒற்று-வேவுகாரரை, இகழ்தல்-அவமதித்தலும், பக்கத்தார் யாரையும்-பக்கத்திலுள்ளோர் எல்லாரிடத்தும், ஐயுறுதல்-சந்தேகித்தலும், தக்கார்-பெரியோருடைய, நெடுமொழி-உறுதிச்சொற்களை, கோறல்-கடந்து நடத்தலும், குணம்-(முன்னிருந்த) தன்மை, பிறிது ஆதல்-வேறு ஆதலும் (ஆகிய இவை), கெடுவது-வரவேண்டுவதாகிய கேட்டை, காட்டும்-முன்னே காட்டுகின்ற, குறி-குறிகளாம்.

கண்ணேக் கரும்பா, நகைமுகமே நாண்மலரா,
இன்மொழியின் வாய்மையே தீங்காயா,-வண்மை
பலமா, நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. 35

(ப-ரை.) கண் நோக்கு (எ)-கண்ணினது குளிர்ந்தபார்வையே, அரும்பு ஆக-அரும்பாகவும், நகை முகமே-இனியமுகமே, நாள்மலர் ஆக-புதுமலராகவும், வாய்மையின் இன் மொழியே-உண்மையாகிய இன்சொல்லே, தீ காய் ஆக-மதுரமான காயாகவும், வண்மை (எ)-கொடையே, பலம் ஆக-பழமாகவும், நலம் கனிந்த-இந்நன்மைகள் மிகுந்த, பண்பு உடையார் அன்றே-தன்மையுடையார்களே, சலியாத-(கொடுப்பதில்) சலித்தலில்லாத, கற்பதரு-கற்பகத்தரு (போல்பவர்) ஆவர்.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா;—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளேயோ டயின்று. 36

(ப-ரை.) வாங்கும்-தாம் வாங்கிக்கொள்ளும், கவளத்து-கவளத்தில், ஒரு சிறிது-மிகச்சிறிதரிசி, வாய்-வாயிலிருந்து, தப்பின்-தவறிச்சிந்தினல், தூங்கும்-அசையுமியல்புள்ள, களிறோ-யானைகளோ, துயர் உறா-துன்பமடையா; ஆங்கு-சிந்திய இடத்தில், அது கொண்டு-சிந்திய அரிசியைப்பெற்று, ஊரும்-தவழ்கின்ற, ஒரு கோடி எறும்பு-பல எறும்புகள், இங்கு-இப்பூமியில், ஆரும்-நிரம்புகின்ற, கிளேயோடு-சுற்றத்தோடு கூடி, அயின்று-உண்டு, உய்யும்-சீவித்திருக்கும்.

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னெக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த வெள்வேலான் பார்வையிற் றீட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு. 37

(ப-ரை.) மாகம்-பெரிய ஆகாயமானது, சிறுக - சிறிதாம்படி, நிதிக்குவை-திரவியராசியை, குவித்து - குவியல்செய்து, ஈகையின்-கொடுப்பதினும், மா கொல்-யானையைக் கொல்லுகின்ற, பகை-பகைத் தன்மையை, முகத்த-தன்முனையிலுள்ள, வெள்வேலான் - ஒளிபொருந்திய வேலையுடைய அரசனது, பார்வையின்-பார்வையால், தீட்டும்-எழுதப்படுகின்ற, நகைமுகத்த-மலர்ந்த முகத்திலுள்ள, நன்கு மதிப்பு - உயர்வாக மதித்தலானவை, எக்கழுத்தம் - தலையெடுப்பை, மிக்கு உடைய-மிகுதியும் உடையனவாம்.

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் றாழ்வார்க்—கணிய
திளையாள்தன் கூட்டெனினும் சேய்த்தன்றே மூத்தாள்
விளைக்கும் உறவு கொளல். 38

(ப-ரை.) பணியப்படுவார்-(தம்மால்) வணங்கப்படும் பெரியோர், புறங்கடையார் ஆக-தலைவாயிலினிடத்தராக, தணிவு இல்-குறைவில்லாத, களிப்பினுல் - செல்வக்களிப்பினுல், தாழ்வார்க்கு - (அவரையெதிர்கொள்ளத்) தாமதிக்கும் அரசர்கட்கு, இளையாள் தன் கூட்டு-சீதேவியினது கூட்டுறவு, அணியது எனினும்-சமீபத்திலிருந்தாலும், மூத்தாள்-மூதேவி, விளைக்கும் உறவு கொளல்-உண்டாக்கும் உறவு கொள்ளுதல், சேய்த்து அன்று-தூரமல்ல.

களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்-தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம். 39

(ப-ரை.) ஊன் - இறைச்சியாலாகிய, உடம்பு-தேகம், தளர்-(பின்பு) தளர்கின்ற, நடையது என்று - முறைமையுடையதென்று, புகழ் உடம்பு - (அவ்வாறு) தளராத புகழாகிய உடம்பை, (அடைந்து அதை) ஓம்புதற்கே-பாதுகாப்பதற்கே, உடம்பட்டார்கள்-பாத்தியப்பட்டவர்கள், களைகண் ஆக-ஆதரவாக எண்ணி, தம் அடைந்தார்க்கு-தம்மை அடைந்தவருக்கு, உற்றஉழியும்-(சிறிது) துன்பம் வந்தவிடத்தும், மற்று ஓர் விளைவு-வேறொருபயனை, உன்னி-கருதி, வெறு உடம்பு-பயனில்லாத உடம்பை, தாங்கார்-தாங்கி உயிர்வாழார்.

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக;—பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின். 40

(ப—ரை.) தம்முடை(ய)—தம்முடைய, ஆற்றலும்—வலியையும், மானமும் — மானத்தையும், தோற்று—இழந்து, தம்—தம்முடைய, இன் உயிர்—இனிமையாகிய உயிரை, ஓம்பினும்—காப்பாராயினும், ஓம்புக—காக்கக்கடவர்கள்; பின்னர்—அப்படிக்காத்தபின், சிறுவரை ஆயினும்—கணப்பொழுதாயினும், தமக்கு — (இழிதொழில் செய்து சீவிக்கும்) தமக்கு, ஆங்கு—காத்தவிடத்து, இறுவரை—முடியும் எல்லை (அதாவது சாங்காலம்), மன்ற இல்லை எனின்—நிச்சயமாக இல்லையானல்.

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும்—கொலைஞாட்பில்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூடி னும். 41

(ப—ரை.) கலன் அழிந்த—மங்கலநாண் இழந்த, கற்பு உடைய—கற்பையுடைய, பெண்டிரும்—குலப்பெண்களும், ஐந்து புலன் — ஐம்புலன், ஒருங்க—கெட, பொய்—நிலையில்லதாகிய உலக இன்பத்தை, ஒழிந்தாரும்—விட்டோரும், கொலை—கொல்லுந்தொழிலையுடைய, ஞாட்பில் — போரில், மொய்ம்பு உடைய — (கலங்காமையாகிய) வலியையுடைய, வீரரும்—வீரர்களும், முரண் மறலி—வலிமையுடைய நமன், தும்பை—தும்பைப்பூமாலையை, முடி சூடினும்—முடியில் சூடிக்கொண்டாலும், அஞ்சார்—கலங்கார். (தும்பைமாலை சூடுவது போர் மேற்கொண்டு செல்லும்போதாதலால், நமன் எதிர்த்து உயிர்கவர வந்தாலும் என்பது கருத்து).

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
கழிமுடை நாற்றத்த வேனும்—விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர்; மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டுதற்கு. 42

(ப—ரை.) விழலர்—(பிறப்பின்) பயனில்லார், புழு நெளிந்து—(தம் உடம்புகள்) புழுக்கள் நெளியும்படி, புண் அழுகி—புண்கள் அழுகி, யோசனை—யோசனைதூரம், நாறும்—நாறுகின்ற, கழி—மிகுந்த, முடை நாற்றத்த எனும்—துர்க்கந்தத்தையுடையன ஆயினும், விளிவு—சாதலை,

உன்னி—நினைத்து, வெய்து உயிர்ப்பர்—பெருமூச்சுவிடுவார்; மெய்ப் பயன்—உடம்பாலாகிய அறப்பயனை, கொண்டார்—பெற்ற பெரியவர், சுமை—(உடம்பாகிய) சுமையை, போடுதற்கு—போட்டுவிடுதற்கு, சுளி யார்—வெறுக்கார்.

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப;—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதை:மற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை? 43

(ப—ரை.) இறைமகன்—அரசன், ஒன்று இகழின் – ஒருபொருளை இகழ்வானாயின், இகழ்ந்து—(தாமும் கூட) இகழ்ந்து, ஆங்கு – அவ் விகழ்ந்த காலத்திலேயே, ஒன்று—அவ்வொருபொருளை, புகழினும்—புகழ்ந்தாலும், ஒக்க—அவனோடுகூட, புகழ்ப—(உலகர்) புகழ்வார்கள்; நீர்வழி—நீரோடுகிறவழியில், பட்ட—உள்ள, புணை—தெப்பம், மற்று என் செய்யும்—(அவ்வழியே செல்லாமல்) வேறெது செய்யவல்லது? (அதுபோல) மன்பதை—மக்கட்கூட்டம், இகல்—மாறுபாட்டையுடைய, மன்னன்—அரசனது, சீர்வழி—குறிப்பின்வழியில், பட்டதே—பொருந் தியதே ஆம்.

செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா—கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே யமைச்சு. 44

(ப—ரை.) அமைச்சு—மந்திரிகள், செவி—காதில், சுட—சுடும்படி, சென்று—அணுகி, இடித்து – உறுதிமொழிகளைச் சொல்லி, அறிவு மூட்டி—அறிவுறுத்தலால், வெகுளினும் – (அரசன்) கோபிப்பானாயி னும், ஆங்கு—அப்போது, வாய்வெரீஇ—சொல்லுதற்கு அஞ்சி, பேரா-அறிவுறுத்தலை விடார்கள்; பாகு—(ஓட்டும்) பாகன், கவிழ்—பெருகு கின்ற மதத்த—மதமுள்ள, கைம்மா—யானையினது, வயத்ததே—வசப் பட்டவனே, எத்திறத்தும்—எவ்விதத்திலும், அம்மாண்பினவே—(மந்திரி களும்) அத்தன்மையரே ஆவர்.

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க:—ஒவ்வொருகால்
எண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னான். 45

(ப—ரை.) வேந்தன்—அரசன், ஒவ்வொருகால் — ஒவ்வொருகாலத்தில் எண்மையன் எனும் —(ஒன்றைச்சொல்லிக்கொள்ள) எளியனுயிருந்தாலும், அம்மா—இது ஆச்சரியம், பெரிது—மிகுதியாக, (அதாவது பலகாலங்களில்) அரியன்—அரியனுயிருப்பன்; கண் இலன்—தாட்சணியம் இல்லான்; உள் - உள்ளத்தில், வெயர்ப்பினுன்-கோபமுடையான்; (ஆதலால்) நமக்கு — நமக்கு, கைவரும் என்று — பழகினவனென்று, காதலித்த—விரும்பினவற்றை, செவ்வி—சமயம், தெரியாது—தெரிந்துகொள்ளாமல், உரையற்க—நீ சொல்லற்க.

பழமை கடைப்பிடியார், கேண்மையும் பாரார்,
கிழமை பிறிதோன்றுங் கோள்ளார்,—வெகுளின்மன்
காதன்மை யுண்டே? இறைமாண்டார்க் கேதிலரும்
ஆர்வலரு மில்லை யவர்க்கு. 46

(ப—ரை.) பழமை-பழையசிநேகத்தை, கடைப்பிடியார்-மறவாமவிரார்; கேண்மையும்-உறவினராந்தன்மையும், பாரார் - மதியார்; கிழமை பிறிது ஒன்றும்-வேறொரு பாத்தியதையையும், கொள்ளார்-நினையார்; வெகுளின்மன் - மிகுதியுங் கோபித்தால், இறைமாண்டார்க்கு - அரசில் மாட்சிமைப்பட்டவர்க்கு, காதன்மை - (ஒருவர்மேல்) அன்புடைமை, உண்டே - உண்டோ? அவர்க்கு - அவ்வரசர்க்கு, ஏதிலரும்- அயலாரும், ஆர்வலரும் - சினேகரும், இல்லை - இல்லை.

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங்காண்டுமென்றெள்ளற்க;—பன்னெடுநாள்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும். 47

(ப-ரை.) யாம்-நாம், மன்னர் - அரசருடைய, புறங்கடை - தலைவாயிலை, காத்து - காத்திருந்து, வறிதே - (அது) பயனிலதே, எந்நலம்-என்ன நன்மையை, காண்டும் என்று - கண்டோமென்று, எள்ளற்க - இகழாதிருக்கக்கடவாய்; பல் நெடுநாள்-பலநாள், காத்தவை எல்லாம்-காத்திருந்தவை எல்லாம், கடைமுறைபோய் - முடிவிற்சென்று, கை கொடுத்து - உதவி, வேந்து அவையில்-இராஜசபையில், மிக்கு-பெருமையை, செய்யும் - செய்துவிடும்.

உறுதி பயப்ப கடைபோகா வேனும்,
இறுவரை காறு முயல்ப;—இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்கறிதன்றால்; அல்லனபோல்
ஆவனவு முண்டு சில. 48

(ப—ரை.) இறும் உயிர்க்கும்—சாகும் நிலையிலிருக்கும் உயிருக்கும், ஆயுள்மருந்து—பிழைக்கும் மருந்தை, ஒழுக்கல்—வாயில்விடுதல், தீது அன்று—(தீமையன்று நலந்தருவதாகும்); (அதுபோல) சில—சிலகருமங்கள், அல்லனபோல் — முடியாதனபோலக் காணப்பட்டு, ஆவனவும் உண்டு — (பின்) முடிவனவுமுண்டு; (ஆதலால்) உறுதி — அடைதற்குரிய நன்மையை, பயப்ப—தரத்தக்க (முயற்சிகள்), கடைபோகா எனும்—முடியா ஆயினும். இறு வரைகாறும்—முடியும் எல்லைவரையும், முயல்ப—(அறிவுடையோர்) முயற்சிசெய்வர்.

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்த்திறத்த வென்னூர்;—மயலாயும்
ஊற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்ரு ரெறிகான் முகத்து. 49

(ப—ரை.) முயலாது — அறிவுடையார் முயற்சி செய்யாமல், வைத்து—(கருமங்களை) வைத்து, முயற்று இன்மையாலே — முயற்சி இல்லாமையாலே, ஊழ்த்திறத்த — ஊழின் வகையில் பட்டகருமங்கள், உயல் ஆகா—தப்புதலாகா, என்னூர் — என்று நினையார்; ஊழ் — ஊழ்வினை, உண்மை—உண்டாயிருத்தலை, காண்டும் என்று — கண்டிருக்கிறோமென்று, மயல் ஆயும்—மயங்கியும், ஊற்றம்இற—மறைவு இல்லாத, விளக்கம் — தீபத்தை, எறி — வீசுகின்ற, கால்முகத்து — காற்றெதிரில், ஏற்ரூர்—(உலகர்) ஏற்ரூர்கள்.

உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே:—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. 50

(ப—ரை.) உலையாத—கெடாத, முயற்சி—முயற்சியானது; களைகண் ஆக—ஆதரவாக, ஊழின் வலி—ஊழினது வன்மையை, சிந்தும்—கெடுக்கின்ற, வன்மையும்—பலமும், உண்டே—உளதே; (அதற்கு) கரி—சாட்சி, உலகு—உலகத்தார், அறிய—அறியும்படி, பால் முளை—ஊழின் முளையை, தின்று — கெடுத்து, மறலி — நமனுடைய, உயிர்—உயிரை, குடித்த—வாங்கிய, கான் முளையே—பிள்ளை(யாகிய மார்க்கண்டேயரே).

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும். 51

(ப—ரை.) தாம் — தாம், காலம் — (ஒரு கருமத்தைச் செய்தற் குரிய) காலத்தை, அறிந்து—தெரிந்து, இடம் — (தகுந்த) இடத்தை, அறிந்து — தெரிந்து, செய்வினையின் — செய்தற்குரிய கருமத்தினது, மூலம் அறிந்து—காரணத்தைத் தெரிந்து, விளைவு அறிந்து—(அக்கருமத் தினு லுண்டாகும்) பயனை அறிந்து, மேலும்—இவற்றை அறிதல் அல் லாமலும், சூழ்வன—ஆராயப்படுவனவற்றை, சூழ்ந்து — (அறிவுடையா ரோடு) ஆராய்ந்து, துணைமை—துணையானவர்களது, வலி தெரிந்து— பலத்தை அறிந்து, (பின்பு) ஆள்வினை—முயற்சியால், ஆளப்படும்— (அக்கருமம்) செய்யப்படும்.

மெய்வருத்தம்பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார்,
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயி னுர். 52

(ப—ரை.) மெய்வருத்தம் — உடம்பின் வருத்தத்தை, பாரார் — கவ னியார்; பசி—பசியை, நோக்கார்—நினையார்; கண் துஞ்சார் — கண்ணு றங்கார்; எவர் எவர் தீமையும்—எவர் எவர் செய்யும் பொல்லாங்கையும், மேற்கொள்ளார்—பாராட்டார்; செவ்வி—தக்ககாலத்தினது, அருமையும்— அருமையையும், பாரார்—கவனியார்; அவமதிப்பும்—அவமானத்தையும், கொள்ளார்—(மனத்தில்) கொள்ளார்; கருமமே — (தாம் மேற்கொண்ட) காரியத்திலேயே, கண் ஆயினுர்—எண்ணமுள்ளவர்.

சிறிய பகையெனினு மோம்புத றேற்ருர்;
பெரிதும் பிழைபா டுடையர்;—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. 53

(ப—ரை.) பகை — பகைகள், சிறிய எனினும்—சிறியன ஆயினும், ஓம்புதல்—(அவற்றைக்) காத்துக்கொள்ளுதலை, தேற்ருர்—அறியாதவர், பிழைபாடு — குற்றம் உண்டாதலை, பெரிதும் உடையர் — மிகுதியும் (அப்பகைகளால்) உடையராவர்; நிறை — நிறைந்த, கயம் தாழ் — மிக ஆழமாகிய, நீர் மடுவில்—நீரையுடைய மடுவில், தவளை குதிப்பினும்— தவளை குதித்தாலும், யானைநிழல் — யானையினது நிழலை, காண்பு அரிது—(அம்மடுவில்) காணுதல் அரிதாகும்.

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகையொன்றஞ்சிக் காப்ப;- அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை. 54

(ப—ரை.) அனைத்து உலகும் – எல்லா உலகங்களையும், சொல் ஒன்றின்—சொல்லொன்றினால், யாப்பார் – தமது வசப்படுத்தத்தக்க முனிவர், பல்காலும் – பலதரமும், காமப்பகை – காமமாகிய உட்பகையை, பரிந்து – வருந்தி, ஓம்பி காப்ப—மிகுதியுங் காப்பார்கள்; (அதுபோல) புறப்பகை – வெளிப்பகைவர், கோடியின் – கோடி என்னுந் தொகையினும், மிக்கு – அதிகமாய், உறினும் – பொருந்து வாராயினும், அஞ்சார் – (அறிவுடையார்) பயப்படார்; அகப்பகை—உட்பகைவனாகிய, ஒன்று – ஒருவனை, அஞ்சி – பயந்து, காப்ப—பரிகரிப்பார்.

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல்வேண்டும்;—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல்: கருவியிட் டாற்றுவார்
புண்;வைத்து மூடார் பொதிந்து. 55

(ப—ரை.) புண் – புண்ணை, கருவி இட்டு - (நோயாளர்) சூரியாலரிந்து, ஆற்றுவார் – ஆறச்செய்வார்கள், பொதிந்து – மறைத்து, மூடார்—மூடிவையார்கள்; (அதுபோலப்) புறம் நட்டு—புறத்திலே சிநேகித்து, அகம் வேர்ப்பார் – உள்ளே கோபங்கொண்டிருப்பவருடைய, நச்சுப்பகைமை – விஷத்தை ஒத்த பகைத்தன்மையை, வெளியிட்டு—வெளிப்படுத்தி, வேறு ஆதல் வேண்டும் – வேறுபடுதலே தகுதி; கழி பெரு கண்ணோட்டம்—மிகுந்ததாட்சணியம், செய்யேல் – செய்யாதே.

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்—திட்பமாம்
நாளுலந்த தன்றே; நடுவ னடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து! 56

(ப—ரை.) நட்பிடை—சிநேகத்தில், குய்யம் வைத்து—வஞ்சித்தலை வைத்து, எய்யாமை – அறிவின்மையாகிய, வினை – பொல்லாங்கை, சூழ்ந்து—ஆராய்ந்துகொண்டு, வட்கார்—பகைவருடைய, திறத்தர் ஆய—வகையையுடையாராகி, நின்றார்க்கு—இருந்தவர்க்கு, திட்பம் ஆம்—(வாழ்வதற்குப்) பலமாயுள்ள, நாள்—ஆயுள், உலந்தது அன்று—முடிந்து

விட்டது அன்று, நடுவன்—யமன், நடு இன்மை—(இவர்கள் இறப்பதற்குக் காரணமாகிய) நடுநிலைமை யில்லாமையை, மறந்து—மறந்துவிட்டு, வாளா—சும்மா, கிடப்பன்—இருப்பான்போலும்!

மனத்த கறுப்பெனின், நல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவேயாகும்:—எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். 57

(ப—ரை.) கறுப்பு — (தீயெண்ணங்களாகிய) களங்கங்கள், மனத்த எனின்—தம்மனத்திலுள்ளன ஆனல், நல்ல—நல்ல கருமங்களை, செயினும்—(ஒருவன்) செய்தாலும், அனைத்து எவையும்—அவையெல்லாம், தீயவே — பொல்லாத காரியங்களாகவே, ஆகும் — தோன்றும்; மாசு இல் — (தீயெண்ணமாகிய) களங்கமில்லாத, மனத்தினவர் — மனமுடையார், எனைத்துணையும் — (ஒருவன்) எவ்வளவுமிகுதியும், தீயவே—பொல்லாத காரியங்களையே, செய்யினும் — செய்தாலும், நல்ல ஆக—(அவற்றை) நற்காரியங்களாக, காண்ப—நினைப்பார்கள்.

இனியவ ரென்சொலினு மின்சொல்லே; இன்னார்
கனியு மொழியுங் கடுவே:—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கும்; மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். 58

(ப—ரை.) அனல் — தீப்போல, கொளுந்தும்—சுடும், வெங்காரம்—வெங்காரமானது, வெய்து எனினும்—வெப்பமுடையதானாலும், நோய் தீர்க்கும்—நோயை நீக்கும்; சிங்கி—விஷமானது, மெய் பொடிப்ப—உடல் புளகிக்கும்படி, குளிர்ந்தும்—குளிர்ந்திருந்தும், கொல்லும்—கொல்லும்; (அதுபோல)இனியவர்-அன்புடையார், என்சொ(ல்)லினும்-(காதுக்கு) இனிமையல்லாத சொல்லைச் சொல்லினும், இன் சொல்லே—(அது பொருளால்) இனியசொல்லேயாம்; இன்னார்—அன்பிலாரது, கனியும்—(காதுக்கு) மதுரிக்கின்ற, மொழியும்—சொல்லும், கடுவே—(பின் தீங்கு தருதலால்) விஷமேயாம்.

பொய்குறளை வன்சொல் பயனிலவேன் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். 59

(ப—ரை.) பொய்—பொய்யும், குறளை—புறங்கூறலும், வல் சொல்—கடுஞ்சொல்லும், பயனில—பயனில்லாச் சொற்களும், என்று இந்நான்கும்—என்று கூறப்படும் இந்நான்கு வாக்குக் குற்றங்களும், சொல்லின்—தம்சொல்லில், எய்தாமை—பொருந்தாமலும், மெய்யில்—உடம்பில், புலம் ஐந்தும்—பொறிகளைந்தும், வழுக்காது — நெறிதப்பிச் செல்லாமலும், காத்து—காத்துக்கொண்டு, மனமாசு—(காமவெகுளி மயக்கமாகிய) மனக்குற்றங்களையும், அகற்றும்—(ஒருவர்) நீக்கி நடக்கும், நலம் அன்றே—தன்மையே, நல் ஆறு—நன்னெறி, எனல்—என்று சொல்லப்படுவது.

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்;—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். 60

(ப—ரை.) பல் பொறிய—பல புள்ளிகளுள்ள, செம் கண் — சிவந்த கண்களையுடைய, புலி ஏறு—ஆண்புலிகள், அற—மிக, பசித்தும் — பசியடைந்தும், பைங்கண் — ஈரமான இடமுடைய, புனத்த — புனத்திலுள்ள, பைங்கூழ்—பயிர்களை, தின்னு ஆம்—உண்ணு ஆம்; (அதுபோல) நல் ஆறு — நன்னெறியில், ஒழுக்கின்றலை—நடப்பதில், நின்றார் — சிறிதுந் தவறாதவர்கள், நல்கூர்ந்தும் — வறுமையடைந்தும், அல்லன — பாவத்தொழில்களை, செய்தற்கு — செய்வதற்கு, ஒருப்படார் — உடன்படார்.

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும், வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவும்,—தவம்விற்றூங்
கூனோம்பும் வாழ்வும், உரிமைவிற் றுண்பதூஉம்,
தானோம்பிக் காத்த றலை. 61

(ப—ரை.) குலம்—தன்குலத்தை, விற்று—முழுமையும் விட்டு, கொள்ளும்—அடைகிற, வெறுக்கையும்—பொருளும், வாய்மை நலம்—உண்மையாகிய நன்மையை, விற்று — முற்றும் விட்டு, கொள்ளும் — அடைகிற, திருவும்—செல்வமும், தவம் விற்று — தவத்தை முற்றும்விட்டு, ஊன்—உடம்பை, ஓம்பும்—காக்கின்ற, வாழ்வும்—வாழ்க்கையும், உரிமை—தன் வமிசத்துக்குரியவற்றை, விற்று—ஒருவர் வசமாக்கி, உண்பதூஉம்—சீவனஞ்செய்வதும், தான் ஓம்பிக்காத்தல்—(தன்னிடத் துண்டாகாமல் ஒருவன்) தான் காத்துக்கொள்ளலே, தலை—முதன்மையான தருமமாம்.

இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வம்—மடநல்லார்
பெண்மை நலம்போல் வளர்ந்திடினும்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும். 62

(ப—ரை.) இடைதெரிந்து—இடம் அறிந்து, அஞ்சு உறுத்து—பயப்படுத்தி, வஞ்சித்து – வஞ்சனைசெய்து, எளியார்—எளியவர்களுடைய, உடைமைகொண்டு—பொருளை அபகரித்து, ஏமாப்பார்—மிகக்களிப்பவருடைய, செல்வம்-செல்வமானது, மடம்—இளமையாகிய, நல்லார்—மாதர்களுடைய, பெண்மை நலம்போல்—பெண் தன்மைக்குரிய அழகமைதியைப்போல, வளர்ந்திடினும் – (முன்னே) மிகுவதாயினும், அவர்—(பின்) அம்மாதருடைய, மற்று நுண் இடைபோல – நுட்பமாகிய இடையைப்போல, தேய்ந்துவிடும்—குறைந்தேபோம்.

பெற்ற சிறுகப் பெருத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா;—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா. 63

(ப—ரை.) வல்விராய்-வன்மையாகிய விறகு, வரவர—(தன்னிடத்து) வந்துகொண்டிருக்க, முற்றும்—முழுமையும், வாய் மடுத்து—வாயால் உண்டு (எரித்து), மாய – (அவ்விறகு) மாண்டால், எரி தழல் – எரிகின்ற தீ, மாயாது இராது—அவியாமலிராது; (அதுபோல) பெற்ற—அடைந்த பொருள்கள், சிறுக – குறைவுள்ளன ஆக, பெருத—அடையாத பொருள்களை, பெரிது உள்ளும் – மிகுதியாக நினைக்கின்ற, சிறு உயிர்க்கு—சிலவாழ்நாளையுடைய உயிர்க்கு, ஆக்கம்—செல்வம், அரிது—இல்லையாம்.

தத்த நிலேக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் ருளூன்றி—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள். 64

(ப—ரை.) தத்தம்—தங்கள் தங்களுடைய, நிலைமைக்கும்—நிலைமைக்கும், குடிமைக்கும்—குடிப்பிறப்புக்கும், தப்பாமே – தப்பாமல், ஒத்த—ஒத்துள்ள, கடப்பாட்டில்—முறைமையில், தாள் ஊன்றி—விடாமுயற்சி செய்து, எய்த்தும்—வருந்தியும், அறக்கடையில் – நீதிக்குப் புறம்பான (பாவ)வழியில், செல்லார் – செல்லாதவராகி, பிறன்பொருளும் – பிற

னுடைய பொருளையும், வெஃகார் — இச்சியாதவருடைய, புறங்கடையது ஆகும்—தலைவாயிலில் சேர்வதாகும், பொருள்—பொருள். ('அறக்கடை' அறங்கடை என்று மெலித்தல் விகாரமாயிற்று.)

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்;
குலமகளே யேனையோர் செல்வம்;—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். 65

(ப—ரை.) தலையாயார்—மேலோருடைய, செல்வம்—செல்வங்கள், பொதுமகள் போல்வ—(பலருக்கும் பணிசெய்வதால்) வேசையை ஒப்பன; ஏனையோர்—இடையானவருடைய, செல்வம்—செல்வங்கள், குலமகள் (போல்வ)—(உடையாருக்கே பணிசெய்தலால்) குலப்பெண்ணையே ஒப்பன; கடையாயார்—கீழ்மக்களுடைய, செல்வம்—செல்வங்கள், கலன் அழிந்த — மங்கலநாணிழந்த, கைமையார் — விதவைகளுடைய, பெண்மை நலம் (ஏ) போல—பெண்மைச்சிறப்பையே போல, பயன்படுவது இல்—பயன்படுதல் இல்லையாம்.

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல;—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான். 66

(ப—ரை.) மற்றையோன்—ஈகைக்குண முடைய வறியன், அருள் இலன் (என்று) — (உயிர்களிடத்துக்) கிருபை யில்லாதவ னென்றும், அன்பு இலன் (என்று) — பிரீதியில்லாதவனென்றும், கண் அறையன் என்று—(பழகினவரிடத்துத்) தாட்சணிய மில்லாதவனென்றும் பலரால் (உம்) — பலராலும், கொன்னே — காரணமில்லாமலே, இகழப்படான்—நிந்திக்கப்படான்; (ஆதலால்) வள்ளன்மை—ஈகை, இல்லாதான்—இல்லாதவனுடைய, செல்வத்தின்—செல்வத்தினும், நல்குரவே—(வறியனுடைய) தரித்திரங்களே, நனி நல்ல—மிகுதியும் நல்லன ஆம்.

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்,
ஓகோ, கொடிது கொடிதம்மா!—நாகொன்று
தீவினைக் கம்மியனுல் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா லிவரென்செய் வார்? 67

(ப—ரை.) ஈகை—கொடுக்குஞ்செய்கை, அரிது எனினும் — (சிலர்க்கு) இல்லையாயினும், இன்சொலினும்—இன்சொல் சொல்லுதலினும்,

நல்கூர்தல்—இல்லாதவராகுதல், ஓகோ—ஐயோ, கொடிது கொடிது—மிகுதியுங் கொடுமையுள்ளது; அம்மா—இது ஆச்சரியம்! தீவினை—பாவமாகிய, சம்மியனுல்—கம்மாளனுல், நா கொன்று—நாக்கை வலியடக்கி, வாய்பூட்டிடப்படின்—(இன்சொல் சொல்லவொட்டாமல்) வாய்பூட்டப்பட்டால், இவர்—இவர்கள், ஆவா—ஐயோ, மற்று என் செய்வார்—வேறு யாது செய்வார்?

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல;—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். 68

(ப—ரை.) சொல் வன்மை—(பிறர் ஏற்றுக்கொள்ளத்தக்க) சொல்லின்வலி, உண்டு எனின் — (ஒருவனுக்கு) உளதானுல், கொன்னே — பயனில்லாமலே, விடுத்தொழிதல்—விட்டு விடல், நல்வினை—செல்வாக்குக்குக் காரணமாகிய நல்வினையை, கோறலின்-கொல்லுதலினின்றும், வேறு அல்ல—வேறன்று; வாக்கின்—செல்வாக்கினது, பயன்கொள்பவர்—பயனைக்கொள்ளவல்லவர், வல்லை—விரைவில், தம் ஆக்கம்—தமது விருத்தி, கெடுவது உளது எனினும்—கெடுதலுள்ளதாயினும், அஞ்சுபவோ—அஞ்சிவிட்டொழிவாரோ? (விட்டொழியார்).

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ? தாழார்;—அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார். 69

(ப—ரை.) அறன் அல்ல—நீதியல்லாதவை (பாவங்கள்), எண்மைய ஆயினும்-(செய்ய) எளியனவாயிருப்பினும், கைவிட்டு—நீக்கிவிட்டு, அரிது எனினும்—(செய்ய) அரிதாயினும், ஒண்மையின்—அறத்தினின்றும், தீர்ந்து - நீங்கி, ஒழுகலார் — நடக்க அறியாதவர்கள், சிறுமுயற்சி செய்து - சிறிய முயற்சியைச்செய்து, ஆங்கு — அத்தொழிலில், உறு பயன்—பெரும்பயனை, கொள்ள-தாம் அடைய, பெறும் எனின்—(அம் முயற்சி) பெறுமானுல், தாழ்வரோ—தாமதிப்பரோ, தாழார்—தாமதியார்.

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்;
நயத்தகு நாகரிக மென்னும்?—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. 70

(ப–ரை.) செய–(தம்மால்) செய்து முடிப்பதற்கு, கடவ அல்லன வும்–தகுதியல்லாதவற்றையும், செய்தும் மன்–மிகுதியும் (நாம்) செய்து முடிப்போம், என்பார்–என்று சொல்பவர், நய(க்க)த்தகும்–விரும்பத்த கும், நாகரிகம் – தாட்சணியம், என் – என்ன பயனுடையது? செயிர் த்து–கோபித்து, உரைப்பின் – (கடுஞ்சொல்லைச்) சொன்னால், நெஞ்சு–மனம், நோம் என்று – (ஒருவன்) வருந்துவானென்று கருதி, தலை – (அவனுடைய) தலையை, துமிப்பான் – வெட்டுவோனுடைய, தண் அளிபோல–கொடுமையாகிய இரக்கமில்லாமையைச் சொல்வது போல, எஞ்சாது–சிறிதும் ஒழியாமல், எடுத்து உரைக்கல்–(பலர்முன்) எடுத்துச்சொல்லுதலாகிய, பாற்று–தன்மையையுடையது.

அல்லன செய்யினு மாகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப;—அல்லால்
பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார்? 71

(ப–ரை.) ஒல்காதார்–அடங்காதவர், அல்லன–அறமல்லனவற்றை, செய்யினும்–செய்தாலும், ஆகுலம்–பலரறிதலையே, கூழ்ஆகக்கொண்டு–பயனாகக்கொண்டு, வாய்விட்டு உலம்புப–வாய்விட்டிரைவார்கள்; அல் லாமல்–(அப்படி) அல்லாமல், செய்தக்க – செய்தற்குரிய அறங்களை, பிறர் பிறர்–யாரோ பிறரொருவர், செய்பபோல் – செய்வார்போன்று, செய்து–தாம் செய்து, ஆங்கு–அக்காரியத்தில், அறிமடம் – அறிந்தும் அறியார்போலிருத்தலை, பூண்டு – அடைந்து, நிற்பார்–நிற்பவர், ஆர்–எவர்? (ஒருவருமிலர்.)

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக்காண்பான்கோடிறுடைத்துக்கோல்வான்போல்
கைவிதிர்த் தஞ்சப் படும். 72

(ப–ரை.) பகை இன்று–பகையில்லாமலே, பல்லார்–பலருடைய, பழி–பழியை, எடுத்து ஓதி–எடுத்துச்சொல்லி, நகை ஒன்றே – நகை த்தலொன்றையே, நல் பயன் ஆக–பெரும்பயனாக, கொள்வான்–கொள்ளுமியல்புடையான், பயம் இன்று – (தனக்கு வேறு) பயனில் லாமல், மெய் விதிர்ப்பு –(மற்றவனுடைய) உடலினடுக்கத்தை, காண் பான்–காணும்பொருட்டு, கோடிறு–கோடிற்றை, உடைத்து – உடை த்து, கொல்வான் போல–வருத்து மியல்புடையானுக்கு நடுங்கி அஞ்சு தல்போல, கைவிதிர்த்து–(பிறரால்) கைந்நடுங்கி, அஞ்சப்படும் – அஞ் சப்படுவான்.

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்;—தெய்வம்
இலதென்பார்க் கில்லை;தம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்? 73

(ப—ரை.) தம் – (தந்தையர்) தம்முடைய, இன்புதல்வர்க்கு அன்றே—நல்ல புத்திரர்களுக்கல்லவா, பயன்—பயனுள்ளமொழியை, பலகாலும்—பலதரமும், சொல்வார் – சொல்வார்கள்? (அதுபோல) தெய்வம் உளது – தெய்வம் உண்டு, என்பார் - என்று அஞ்சி நடப்பவர், தீய - கெடுதியாயினவற்றை, செயப்புகின் – செய்யத்தொடங்கினால், தெய்வமே—அத்தெய்வமே, கண் இன்று – தாட்சணியமில்லாமல், நின்று—எதிர்நின்று, ஒறுக்கும்—தண்டிக்கும்; தெய்வம்—தெய்வமானது, இலது என்பார்க்கு—இல்லை என அஞ்சாது நடப்பவர்க்கு, இல்லை –(அவ்வித தண்டிப்பு) இல்லை.

தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே, வேறல்ல;—தீயன
நல்லன வாகாவாம்: நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல். 74

(ப—ரை.) நா—நாவினால், இன்பு உற – இன்பம் உண்டாக, நக்கி—நக்கி, கொல்லும்—பின் கொல்லுகிற, கவயமாபோல—காட்டுப்பசுவைப் போல, தீய செயல்—பொல்லாங்கான செய்கையை, செய்வார்—செய்பவர்களுடைய, ஆக்கம் – செல்வங்கள், பெருகினும் - முன் பெருகினாலும், தீயன-கெடுதொழிலால் வந்த செல்வங்கள், தீயனவே - துன்பந் தருவனவே ஆம், வேறு அல்ல - இன்பந்தருவன அல்ல; (ஆதலால்) தீயன-தீயவை, ஆகா-அடைதற்குரியன அல்ல; நல்லன - நல்லவை, ஆம்-அடைதற்குரியன.

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர்;—முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில. 75

(ப—ரை.) தம்—தம்முடைய, முன்னை—பழமையாகிய, ஊழ் வலி—ஊழ்வினையினது வலியை, உன்னி—(தம் அனுபவத்துக்குக் காரணமாக) நினைத்து, பழி—பழிக்கு, நாணி – கூசி, உள் உடைவார் – மனம் வருந்துவோர், சில தீய—சில பொல்லாங்குகளை, செயினும்—செய்தாரா

யினும், (அவர்), நல்மக்கள்—நல்லோருடைய, செம் நா—உண்மையைக் கூறும் நாவில், தழும்பு இருக்க – புகழ்ந்த தழும்பு மாறுதபடி, நாள்வாயும்—நாள்தோறும், செம் நெறி—நல்வழியில், செல்வாரின் – நடக்கின்றவர்களினின்றும், கீழ் அல்லர்—தாழ்ந்தவரல்லர்.

பிறன்வரை நின்ருள் கடைத்தலை சேறல்
அறனன்றே; ஆயினு மாக:—சிறுவரையும்
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய். 76

(ப—ரை.) பிறன் வரை—பிறனுடைய எல்லையில், நின்ருள்—நின்றவளுடைய, கடைத்தலை—தலைவாயிலில், சேறல் – (அவளை விரும்பிச்) செல்லுதல், அறனே அன்று—தருமமே அன்று; ஆயினும் ஆக—தருமம் ஆயினும் ஆகட்டும்; சிறுவரையும் – கணப்பொழுதும், நல் நலத்தது ஆயினும்—நல்ல இன்பத்தைத் தருவதாயிருப்பினும், கொள்க—(அப்பாரதாரகமனத்தை) அடையக்கடவாய்; (அக்காலத்தில் நீ படுகின்ற) மெய் நடுங்க – உடல்நடுங்கும்படி, உள்நடுங்கும் – உள்ளம் நடுங்குகின்ற, நோய்—நோய், நலம் அன்றே—இன்பம் அல்லவே.

கருமஞ் சிதையாமே, கல்வி கெடாமே,
தருமமுந் தாழ்வு படாமே,—பெரிதுந்தம்
இன்னலமுங் குன்ருமே, ஏரிளங் கொம்பன்னுர்
நன்னலந் துய்த்த னலம். 77

(ப—ரை.) தம்—தமது, கருமம்—உரிய தொழிலும், சிதையாமே—கெடாமல், கல்வி – கல்வியும், கெடாமே - மறவாமல், தருமமும் - (கொண்ட) தருமமும், தாழ்வுபடாமே-தளர்ச்சியடையாமல், பெரிதும்-மிகுதியும், இன் நலமும் – (இளமை முதலிய) இனிய தன்மைகளும், குன்ருமே—குறையாமல், ஏர்—அழகிய, இளகொம்பு – இளமையாகிய பூங்கொம்பை, அன்னுர்-ஒத்த தம்மனைவியருடன் (ஒற்றுமையாகச் செய்யத்தக்க), நல் நலம்-நல்ல (இல்லற) இன்பத்தை, துய்த்தல்-அநுபவித்தல், நலம்-நன்மையாம்.

கொலையஞ்சார்; பொய்ந்நாணுர்; மானமு மோம்பார்;
களவொன்ருே? ஏனையவுஞ்செய்வார்;—பழியொடு
பாவமிஃ தென்னுர்: பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப்பட் டார்! 78

(ப—ரை.) காமம்—காமத்தினுல், கதுவப்பட்டார் – பற்றப்பட்டவர்கள், கொலை—(பிறரைக்) கொல்லுதற்கு, அஞ்சார்—பயப்படார்; பொய்-

பொய்சொல்லுதற்கு, நாணர்-கூசார்; மானமும்—மானத்தையும், ஓம்பார்—காத்துக்கொள்ளார்; களவொன்றோ—திருட்டு ஒன்று மாத்திரமா? ஏனையவும்—மற்ற தீச்செயல்களையும், செய்வார் - செய்வார்கள்; (தமது செயல்களில்) இஃது—இச்செயல், பழியொடு—பழியுடனே, பாவம்—பாவத்தைத் தருவது, என்னார்—என்று நினையார்; (இவை அல்லாமல்) பிறிது என் செய்வார் - வேறு எதைச் செய்வார்கள்?

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்,
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார்;—நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர். 79

(ப—ரை.) நறுவிய—இனிய பொருள்கள், வாயின எனும் - வாயிலுள்ளன ஆனாலும், உமிழ்ந்து—(அவற்றை) உமிழ்ந்து, கடு—கசப்பான பொருள்களை, தின்னும்—தின்னுகிற, தீய — கொடிய, விலங்கின் — மிருகங்களைப்போல, சிலர் — சில தீயோர், மனைக்கிழத்தி — இல்லறத்துக்குரியாளாகிய மனைவி, திருவினும்—இலக்ஷ்மியைப் பார்க்கினும், நல்லாள் எனும் — (கற்பிலும் அழகிலும்) சிறந்தவளாயிருப்பினும், பிறர் மனைக்கே—பிறருடைய மனைவியரிடத்தேயே (பிரியங்கொண்டு), பீடு அழிந்து நிற்பார் - பெருமைக்குணம் அழிந்து நிற்பார்கள்.

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு. 80

(ப—ரை.) கற்பு—கற்பாகிய உடையை, உடுத்து—தரித்து, அன்பு - அன்பாகிய மலரை, முடித்து—சூடி, நாண்—நாணமாகிய சந்தனத்தை, மெய் பூசி—உடம்பில்பூசி, நற்குணம்—நற்குணமும், நற்செய்கை - நற்செய்கையுமாகிய ஆபரணங்களை, பூண்டாட்கு—பூண்டவளுக்கு, மக்கட்பேறு என்பது—பிள்ளைப்பேறெனப்படுவதாகிய, ஓர் செல்வமும்—ஒப்பற்ற செல்வமும், உண்டாயின் — உண்டாயிருந்தால், கொண்டாற்கு—கணவனுக்கு, செய் தவம்—செய்த தவப்பயன், வேறு இல் அன்றே-வேறு (வேண்டுவது) இல்லை.

எந்தெழின் மிக்கான், இளையான், இசைவல்லான்,
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்,—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான், கேள்; எனினுமாதர்க்
கயலார்மே லாகு மனம். 81

(ப—ரை.) கேள் — கணவன், ஏந்து எழில்—சிறந்த அழகு, மிக்கான்—மிகுந்தவன்; இளையான்—இளமைப்பருவமுடையவன், இசை வல்லான் — இராகம் வல்லவன், காந்தையர் — பெண்களுடைய, கண் கவர்—கண்களைக் கிரகிக்கத்தக்க, நோக்கத்தான் — பார்வையையுடையவன், வாய்ந்த—அமைந்த, நயன் உடைய—கேள்விக்கிதமுடைய, இன் சொல்லான் எனினும் — இனிய சொல்லையுடையவனுயிருப்பினும், மாதர்க்கு—(சில தீய) பெண்களுக்கு, அயலார்மேல் — அந்நிய புருஷர் மேல், மனம் ஆகும்—மனம் செல்லும்.

கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லார்;—மற்றுத்தம்
கேள்வற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார். 82

(ப—ரை.) கற்பு இல்—கற்பில்லாத, மகளின்—குலஸ்திரீயைப் பார்க்கினும், நலம்—தம் அழகை, விற்று—விலைப்படுத்தி, உணவு கொள்ளும்—உணவு சம்பாதித்து (ஜீவனம் செய்யும்), பொன் தொடி—பொன்னுற் செய்யப்பட்ட வளையலணிந்த, நல்லார்—வேசியர், நனி நல்லர்—மிகுதியும் உத்தமியர்: (ஏனெனில் வேசியர் இவளைப்போல்) தம் — தம்முடைய, மற்று கேள்வற்கும்—நாயகனுக்கும், ஏதிலற்கும்—அந்நியனுக்கும், தங்கட்கும்—தங்களுக்கும், தம் கிளைஞர் யாவர்க்கும்—தம்முறவினரெல்லார்க்கும், கேடு-(மானக்) கேடு (செய்ய), சூழார்-ஆலோசியார்.

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்;
நிறையு நெடுநா ணும் பேணர்;—பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே? பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு. 83

(ப—ரை.) முறையும்—(ஒருவன் தமக்காகும்) முறையையும், குடிமையும் — (தாம் பிறந்த) குடிப்பெருமையையும், பான்மையும் — (சாதியினது) வகுப்பையும், நோக்கார் — எண்ணர்; நிறையும்—(மனம் அந்நியர்பால் செல்லாமல்) நிறுத்துங் குணத்தையும், நெடு நாணும் — மிக்க நாணத்தையும், பேணர் — விரும்பார்; பிறிது ஒரு பெற்றிமையும் — வேறொரு நன்மையும், பேதைமைக்கு—(அவருடைய) அறியாமைக்கு, உண்டே—உண்டோ? இல்லை. (ஆதலால்) கற்பு இல் — கற்பில்லாத, மகளிர் பிறப்பு — பெண்களுடைய ஜன்மம், பெரும்பாவம் — மிகுந்த பாவத்தாலானதாம்.

பெண்மை வியவார்; பெயரு மெடுத்தோதார்;
கண்ணொடுநெஞ்சுறைப்பநோக்குறார்;-பண்ணொடு
பாடல் செவிமடார்; பண்பல்ல பாராட்டார்:
வீடில் புலப்பகையி னார். 84

(ப—ரை.) வீடு இல் —(பிறர்க்குக்) கெடுதலில்லாத, புலப்பகையினார் — விடயங்கட்குப் பகையாகிய துறவிகள், பெண்மை — பெண் தன்மையை, வியவார்—நன்குமதிக்கார்; பெயரும் — பெண்ணென்னும் பெயரையும், எடுத்து ஓதார்—எடுத்துச் சொல்லார்; நெஞ்சு உறைப்ப— மனதில் பதியும்படி, கண்ணொடு — கண்களால், நோக்குறார் — பாரார்; பண்ணொடு—இசையுடனே, பாடல்—பாடுதலை, செவிமடார் — காதாற் கேளார்; பண்பு அல்ல-(மற்ற) நல்ல தன்மையன ஆகாதனவற்றை, பாராட்டார்—கவனியார்.

துயிற்சுவையுந் தூய்தல்லாத் தீஞ்சுவையு மெல்லாம்
அயிற்சுவையி னாகுவவென் றெண்ணி-அயிற்சுவையும்
பித்துணக் கொள்பபோற் கொள்ப: பிறர்சிலர்போல்
மொத்துணா மொய்ம்பி னவர். 85

(ப—ரை.) பிறர் சிலர்போல்—பிறராகிய சிறியர்போல, மொத்துண்ணாத—(பிறவித்துன்பத்தில்) அடிபடாத, மொய்ம்பினவர் — (தவத்தின்) வல்லமையுடையார், துயில் சுவையும் — நித்திரையின்பமும், தூய்து அல்லா-பரிசுத்தமானதல்லாத, தீம்சுவையும்-(வேறுவகையான) இன்பமும், எல்லாம்—மற்றயாவும், அயிற்சுவையின்-(சோறு முதலியவற்றை) உண்ணுதலின்பத்தால், ஆகுவ என்று-உண்டாவனவென்று, எண்ணி- கருதி, அயிற்சுவையும் — அவ்வுண்ணுத லின்பத்தையும், பித்து — பித்தர்கள், உணா-உண்டியை,கொள்பபோல—கொள்வார்போல, கொள்ப- மிகச் சிறிது கொள்வார்கள்.

அன்பொ டருளுடைய ரேனு முயிர் நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார்;—புன்புலாற்
பொய்க்குடி லோம்புவரோ? போதத்தாற் றாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார். 86

(ப—ரை.) போதத்தால் - ஞானமாகிய மேற்பரப்பால், தாம் வேய்ந்த — தாம் கூரைவேய்ந்த, புக்கில் — மோட்சமாகிய வீட்டில், குடி புகுதுவார்-குடிபோக எண்ணுவோர், புல் புலால்-இழிவாகிய ஊனால் வேய்ந்த, பொய்க் குடில்-நிலையில்லாததாகிய உடலென்னுங் குடிசை

யை, ஓம்புவரோ—காப்பரோ? (காக்கார். ஆதலால்) அன்பொடு – அன்புடனே, அருள்–கிருபையை, உடையர் எனும் – உடையாராயினும், என்பு – எலும்பு, இயக்கம்–மேலெழுந்து தோன்றல், கண்டும் – உண்டாகியும், உயிர்நிலை – தம்முடம்பை, புறந்தரார் – (அன்பும் அருளும் வைத்துக்) காப்பாற்றார்.

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப;—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்குப்பி யில்? 87

(ப—ரை.) சிறு இன்பம் – சிற்றின்பமானது, சில் நீரது ஆயினும்–அற்பசுபாவமுடையதாயினும், அஃது உற்றார் – அச் சிற்றின்பத்தை யடைந்தவர்கள், மற்று இன்பம் யாவையும் – மற்ற இன்பங்களையெல்லாம், கை விடுப – கைவிடுவார்கள்; (அங்ஙனமாக) பேர் இன்பம்–பேரின்பமாகிய, மா கடல் – பெரியகடலில், முற்றும் ஆடுவார்–முழுவதும் முழுகுவோர், பார் இன்பம்–உலக இன்பமாகிய, பாழ்கும்பியில்–பாழ்நரகத்தில், வீழ்பவோ–வீழ்வார்களோ? (வீழமாட்டார்.)

எவ்வினைய ரேனுமட வாருறவொன் றில்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்;—அவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர். 88

(ப—ரை.) எவ்வினையர் எனும் – (துறவிகள்) எந்தத் தீத்தொழிலையுடையராயினும், மடவார் உறவு – மாதர் உறவு, ஒன்று இல் எனின்–ஒன்று மட்டும் இல்லாரானால், தெவ்வும் – பகைவரும், திசைநோக்கி–(தாமிருக்கும்) திக்குநோக்கி, கை தொழூம்–கைகூப்பித்தொழுவர்; அவ்வினை–(மாதர் உறவு பொருந்தலாகிய) அத்தீச்செயலை, காத்தல்–தடுத்தல், இலர் எல் – இல்லாரானால், எனைத்துணையர் ஆயினும்–எவ்வளவு பெருமையுடையாரானாலும், தூர்த்தரும்–காமுகரும், அலர்–பழிசொற்களால், தூர்ப்பார்–(பிறர்காதை) நிரப்புவார்.

பரபரப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப;—ஒருவாற்றான்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப:
எவ்வாற்றா னுய்வா ரிவர்? 89

(ப—ரை.) பரபரப்பினேடே — (பலர்) மிக்கவிரைவுடனே (சிறிதுஞ் சோம்பலில்லாமல்), பல பல செய்து — மிகப் பல காரியங்களைச் செய்யாநின்று, இரவு பகல்—இராவையும் பகலையும், பாழுக்கு—அவமாகிய காரியத்துக்கு, இறைப்ப-கழிப்பார்கள்; ஒரு ஆற்றுன் — (பெரியவர்) ஒரு விதத்தால், நல் ஆற்றின்—நல்வழியில், ஊக்கின் — உற்சாகப்படுத்திச் செலுத்தினுல், பதறி—துடித்து, குலைகுலைப — நடுநடுங்குவார்; இவர்—இத்தன்மையோர், எவ்வாற்றுன்—எவ்விதத்தால், உய்வார்—(பிறவித்துன்பத்தினின்றும்) தப்புவார்? (ஒருவாற்றுனும் தப்பார்.)

இளையம்; முதுதவ மாற்றுது நேர்றென்
றுளைவின்று கண்பாடு மூழே—விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமைகாண்பரேல்; காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம். 90

(ப—ரை.) விளிவு — சாதல், இன்று—இல்லாமல், வாழ்நாள் — தம் ஆயுள், வரம்பு—எல்லையை, உடைமை — உடைத்தாயிருப்பதை, காண்பர் எல்—ஒருவர் அறியமாட்டுவாராஞல், இளையம்—நாம் இளமைப் பருவத்தையுடையோர், முதுமை—முதுமைப் பருவத்தில், நோற்று—(பசி முதலானவற்றைப்) பொறுத்து, தவம்—தவத்தை, ஆற்றுதும் என்று—செய்வோமென்று, உளைவு இன்று — வருத்தமில்லாமல், கண்பாடும்—உறங்கிக்கிடப்பதும், ஊழே—முறைமையே; காண்பாரும்—(வாழ்நாள் வரம்புடைமையை) அறியவல்ல முனிவரும், தாழாமே—தாமதியாமல், தவம் நோற்பார்—தவம் செய்வர்.

நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும்;—எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல். 91

(ப—ரை.) ஆறலைத்து — வழிபறித்து, உண்பார் — அப்பொருளால் சீவனஞ் செய்யுங் கள்ளர்கள், எல்லி—இரவில், வியன்நெறி—பெருவழியில், செல்வாரை — போகின்றவர்களை, செலவு — (கருதிய இடத்துக்குப்) போதலை, பிழைத்து — தப்புவித்து, உய்ப்பபோல் — செலுத்துவார்போல, நல்லவை — நற்காரியங்களை, செய்யத்தொடங்கினும்—(ஒருவர்) செய்யத்தொடங்கினுலும், அல்லன—தீயவினைகள், நோனுமே—பொறுக்காமல், அல்லவற்றில்—தீய கருமங்களில், கொண்டு—(அவரைத்) தம் வசப்படுத்தி, உய்க்கும்—செலுத்தும்.

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே;—கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது. 92

(ப—ரை.) கஞ்சுகம்—சட்டை, எப்புலமும்—எல்லாப்புலன்களையும், காவாமே – காக்காமல், மெய்ப்புலம் – உடம்பாகிய புலனை, காக்கும்—பாதுகாக்கும்; இது—தவவேடப்போர்வை, இப்புலமும்—மெய்ப்புலனையும், மற்றுக்க வாது – காக்கவலியிலது; (ஆதலால்) நெஞ்சு – மனம், புறம்பு ஆக—புறத்தில் செல்ல, துறந்தார் – துறந்தவர்களுடைய, தவப் போர்வை—தவவேடமாகிய போர்வை, கஞ்சுகம் உம் அன்று—சட்டையுமல்ல; பிறிது ஒன்றே—வேருகிய ஒரு பொருளே.

வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்:—வஞ்சித்த
எங்கு முளனொருவன் 'காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. 93

(ப—ரை.) வஞ்சித்து – (தவவேடத்தினுல் உலகத்தாரை) வஞ்சனை செய்து, ஒழுகும் – நடக்கின்ற, மதியிலிகாள் – அறிவிலிகளே! யாவரையும் – எல்லாரையும், வஞ்சித்தோம் என்று – (இதுவரையும் நமது தீயொழுக்கம் அவரறியாதபடி நடந்து) வஞ்சித்து விட்டோம் என்றெண்ணி, மகிழன்மின் – மகிழ்ச்சியடையாதிருங்கள்; வஞ்சித்த—பிறரறியாதபடி செய்த தீயொழுக்கங்களை, எங்கும் உளன் – எப்பொருள்களிலும் நிறைந்துள்ளவனாகிய, ஒருவன் – ஒப்பு உயர்வில்லாத இறைவன், காணும் என்று—அறிவானென்று, அஞ்சி—பயந்து, அங்கம்குலைவது—உடல் நடுங்குதல், அறிவு—அறிவாம்.

175381

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப்பரக்கும்;—கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து. 94

(ப—ரை.) கழி முடை—மிக்க துர்க்கந்தத்தையுடைய, புல் புலால்—இழிவாகிய இறைச்சியை, பொதிந்து – ஒன்றிற்போட்டு, மூடினும்—மூடிவைத்தாலும், நாற்றம்—அதன் தீநாற்றம், புறம் சென்று – வெளிப்பட்டு, சேயார் – தூரத்திலிருப்பவருடைய, முகத்து (உம்)—மூக்கிலும், உதைக்கும்—தாக்கும்; (அதுபோல) மறைவழி—இரகசியத்தில், பட்ட—

நடந்த, பழி — பழிக்கப்பட்ட தீயொழுக்கத்தைக் குறித்த, மொழி—சொற்கள், தெய்வம்—கடவுள், பறை அறைந்தால் ஆங்கு—பறைகொட்டினாற்போல, ஓடி—விரைந்து, பரக்கும்—(எங்கும்) பரவும்.

மெலியார் விழினு மொருவாற்ரு னுய்ப;
வலியார்மற் ருென்ருனு முய்யார்:—நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற. 95

(ப—ரை.) நிலைதப—நிலைகெட, நொய்ய — அற்பமானவை, சழக்கு என — விரைவாக, வீழா — விழமாட்டா; வீழினும் — வீழ்ந்தாலும், உய்யும்—பிழைக்கும்; பிற—கனமானவை, உய்யா—(வீழ்ந்தால்) பிழைப்பன அல்ல; (அதுபோல) மெலியார் — சிறியோர், விழினும் — (தம் நிலையினின்று) தவறினும், ஒரு ஆற்ருன்—ஒருவகையால், உய்ப—(அத்தவறுதலினின்றும்) தப்புவார்; வலியார்—பெரியோர், (தம் நிலையில் தவறினல்) ஒன்ருனும்—ஒருவகையாலும், மற்று உய்யார்—தப்புவாரல்லர்.

இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால்;-பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரையொப்பவே
ஊனோம்பி யூன்றின் பவர்? 96

(ப—ரை.) தீ ஓம்பி—தீயைவளர்த்து, பசு-பசுவினல், வேட்டு—யாகஞ்செய்து, வான் வழக்கம்—மேகம் மழைபெய்தலை, காண்பாரை—செய்யவல்ல அந்தணரை, ஊன் தின்று—இறைச்சியைத் தின்று, ஊன் ஓம்புபவர்—உடலைப் பாதுகாக்கும் இழிசனர்கள், ஒப்பவே—ஒப்பார்களோ? (அதுபோல) மேலையோர் — பெரியோருடைய, செய்கை—செயல்கள், இசையாத—பொருந்தாதன, போலினும்—போலக்காணப்படினும், மற்றையோர்க்கு (அச்செயல்கள்) கீழோர்க்கு, அல்லால்—பழிப்பாவன அல்லாமல், வசை ஆகா — (அப்பெரியோர்களுக்குப்) பழிப்பாகமாட்டா.

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி—எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென. 97

(ப—ரை.) தம் உடையான்—தம்மை ஆளாக உடைய இறைவன், எப்பாலும்—(எல்லாப் பொருள்களிலும்) உள்ளும் புறம்பும், நிற்பது என—நிறைந்திருப்பதுபோல, எம் உடையார்—எம்மை ஆளாகவுடைய யோகிகள், எவர் எவர்—யாவர் யாவர், எத்திறத்தர்—எவ்வெப்பக்குவத் தையுடையாரோ, அத்திறத்தர் ஆய் — அப்பக்குவத்துக்கு, அமைந்தவர்க ளாய், நின்று—தாம் இருந்து, அவர் அவர்க்கு—அவரவர்களுக்கு, ஆவன—தகுந்த உறுதிமொழிகளை, கூறி—உபதேசித்து, எவர் எவர்க்கும்—எவ ரெவர்களுக்கும், உப்பால் ஆய்—புறம்பாகி, நிற்ப—இருப்பார்கள்.

மெய்யுணர்ந்தார் போய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்;—மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாய்ப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. 98

(ப—ரை.) மெய் உணர்ந்தார்—(பிறப்பு வீடுகளையும் அவற்றின் கார ணங்களையும்) உண்மையறிவா லறிந்தவர்கள், பொய் மேல்—நிலையில் லாதனவாகிய விடய இன்பங்களில், புலன்—ஐம்புலன்களையும், போக் கார்—செலுத்தாமல், மெய்—மெய்ம்மையாகிய முதற்பொருளை, உணர் ச்சி—பாவித்தல், கைவருதல் ஏ — சித்திப்பதே, கண்ணுக—கருத்தாக, புலம் காப்பார் — அவ்வைம்புலன்களையும் தடுப்பார்கள்; மெய் உணர்ந் தார்—அவ்வுண்மையறிவா லறிந்தவர்கள், காப்பே — (புலங்களை) அடக் குதலே, நிலையாக — வாசற்காலாகவும், பழி நாணம் ஏ — பழிக்குக்கூசு தலே, நீள்கதவாக — பெருங்கதவாகவும், நிறை — (மனத்தைப் புலன்க ளின் வழியிற்செல்லாமல்) நிறுக்குங்குணமாகிய, தாழ் — தாழக்கோலை, செறித்து—உறுதியாகப்போட்டு, சேர்ப்பார்—(முதற்பொருளைப் பாவித் தலில் மனத்தை) ஒருமைப்படுத்துவார்கள்.

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பிளுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல்—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில். 99

(ப—ரை.) கற்று—(ஞானநூல்களைக்) கற்று, துறை—பொருள்வகை களில், போய—தேர்ந்த, காதலற்கு — கணவனுக்கு, கற்பிளுள்—கற் புடைய மனைவி, பெற்றுக்கொடுத்த—பெற்றுக்கொடுத்த, தலைமகன் போல—அறிவிற்சிறந்த புத்திரன்போல, முற்ற—முழுவதும், துறந்தார் க்கு—துறந்தவர்க்கு, மெய்—முதற்பொருளை, உணர்வில்—பாவித்தலில், தோன்றுவதே—தோன்றும் இன்பமே, இன்பம்—நிரதிசய இன்பமாம்;

இறந்த எல்லாம்—அஃ்து ஒழிந்த உலகத்தின்பமெல்லாம், துன்பம்—துன்பமாம்; அ(ல்)லாது இல்—இன்பமாவதில்லை.

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்—பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார். 100

(ப—ரை.) கற்று—(ஞானநூல்களைக்) கற்று, அறிந்து—(அவற்றின் பொருள்களைச் சந்தேக விபரீதமில்லாமல்) அறிந்து, அடங்கி—(செருக்கில்லாமல்) அடங்கி, தீது—(அந்நூல்கள்) விலக்கியதினின்று, ஓரீஇ—நீங்கி, நன்று—விதித்ததை, ஆற்றி—செய்து, பெற்றது கொண்டு—அடைந்த அறிவினால், மனம்—மனத்தை, திருத்தி—திருந்தச்செய்து, பற்றுவதே—கொள்ளுதற்குரிய முத்திநெறியையும், பற்றுவதே—(அதற்கு அமைந்த) உபாயத்தையும், பற்றி—உட்கொண்டு, பணி—(வேறு)முயற்சி, அற—நீங்க, நின்று—(தியானநிலையில்) நின்று, ஒன்று—ஒப்புயர்வு இல்லாத முதற்பொருளை, உணர்ந்து—(இடைவிடாமல்) பாவித்தல் செய்து, நிற்பாரே—(அந்நிலையில் மாறாது) நிற்பவரே, நீள் நெறி—(முத்தியினது) பெருவழியில், சென்றார்—அடைந்தவர் (ஆவர்).

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்—தம்முளே
காண்பதே காட்சி; கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். 101

(ப—ரை.) அளந்து—(ஆன்மசொரூபத்தை வேதாகமங்களாகிய) அளவையாலறிந்து, ஐயம்—சந்தேகமும், திரிபு—விபரீதமும், இன்று—இல்லாமல், உத்தியின்—கருதலளவையால், தெளிந்து—துணிந்து, மெய்—முதற்பொருளை, உணர்ச்சி—பாவித்தலாகிய, கண் விழிப்ப—கண்விழியா நிற்க, தூங்குவார்—ஞானநித்திரை செய்பவர்கள், தம்முள்—தம்மிடத்தில், காண்பதே—தோன்றுவதாகிய ஆனந்தமே, காட்சி ஆக—காணப்படும் பொருளாகவும், கனவு ஏ—(அத்தூக்கத்தில் வெளிப்படும்) கனவே, நனவு ஆக—சாக்கிரமாகவும், பூண்பதே—பொருந்தும் நிலையே, தீர்ந்த பொருள்—முடிந்த பயனும்.

அனுபந்தம்

முதுமொழிக்காஞ்சி பொருளடக்கம்

	பக்கம்.
1. சிறந்த பத்து	3
2. அறிவுப் பத்து	4
3. பழியாப் பத்து	6
4. துவ்வாப் பத்து	7
5. அல்ல பத்து	9
6. இல்லை பத்து	10
7. பொய்ப் பத்து	11
8. எளிய பத்து	13
9. நல் கூர்ந்த பத்து ..	14
10. தண்டாப் பத்து	15

நீதிநெறிவிளக்கம்

செய்யுள் முதற்குறிப்பகராதி

	பக்கம்.
அல்லன செய்யினு	43
அவையஞ்சி	19
அறம் பொரு	17
அன்பொடரு	48
ஆக்கம் பெரியார்	23
இகழினிகழ்ந்	33
இசையாத	52
இடை தெரிந்	40
இவறன்மை	21
இளையமுதுதவ	50
இனியவரென்	38
இன்சொல்லன்	20
இன்றுகொ	28
ஈகையரிதெ	41
உலையா முயற்சி	35
உறுதிபயப்ப	34
எத்துணைய	18
எவரெவ	52
எவ்வினைய	49
எனைத்துணைய	20
ஏதிலார் யாதும்	29
ஏந்தெழின்	46
ஐயந்திரிபின்	54
ஒற்றிற்றெரியா	28
கண்கூடாப்	29
கண்ணிற்	27
கண்ணோக்கரு	30
கருமஞ்சிதையா	45
கலனழிந்த	32
கலைமகள்	19

	பக்கம்.
கல்வியுடைமை	22
கல்வியே	15
களைகணுத்	31
கற்பனவூழற்றார்	25
கற்பின்மகளி	47
கற்புடுத்தன்பு	46
கற்றனகல்லார்	26
கற்றாங்கறிந்	54
கற்றுத்துறை	53
கற்றுப்பிறர்	24
கற்றோர்க்கு	21
காலமறிந்	35
குடிகொண்	27
குலமகட்குத்	26
குலம்விற்று	39
கைவரும்	33
கோலையஞ்சார்	45
சிறியபகை	36
சிறுமுயற்சி	42
சிற்றின்பஞ்	49
செயக்கடவ	42
செவிசுடச்	33
சொல்வன்மை	42
தத்தநிலைக்குந்	40
தம்மின்மெலி	22
தம்முடை	32
தன்னைவியப்பி	23
திருவினு	46
தீயசெயல்	44
துயிற்சுவையுந்	4[illegible]
தெய்வமுள	44
தொடங்குங்காற்	17
நட்பிடைக்	37
நட்புப்பிரித்தல்	29
நல்லவை	50
நல்லாறொழுக்கின்	39
நன்மக்கள்	44
நீர்ற் குமிழி	17
நெஞ்சுபுறம்பா	51
நெடும்பகல்	19
பகையின்று	43
பணியப்படுவார்	31
பராபரப்பி	49
பழமைகடைப்	34
பிறராற்	24
பிறர்க்குப்பயன்	25
பிறன்வரை	45
புறநட்டகம்	37
புழுநெளிந்து	32
புறப்பகை	37
பெண்மை	48
பெற்றசிறுகப்	40
போதுமகளே	41
பொய்குறளை	38
போக்கறு கல்வி	25
மறைவழிப்	51
மனத்தகறுப்	38
மன்னர்புறங்	34
மாகஞ்சிறுக	30
மூடிப்பமுடி	28
முயலாது	35
முறையுங்	47
முற்றுமுணர்ந	22
மெய்யுணர்ந்தார்	53
மெய்வருத்தம்	36
மெலியார்	52
வஞ்சித்தொழுகு	51
வருந்தித்தாங்	20
வள்ளன்மை	41
வாங்குங்சவளத்	30
விலக்கிய	23
வேதத்தவை	26

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1924 B 4393.

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய நீதி கதா கிருதிகள்.

'ஈஸாப் கதைகள்' என்று நீதி புகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். அக் கதைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டவை. அவைகளின் அருமை பெருமைகளால் அவை இன்றும் அழியாமல் உலகம் முழுவதும் பிரபலமாய் வழங்கி வருகின்றன. அநேகமாய் முக்கியமான பாஷைகள் பலவற்றிலும் அவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவையாயிருக்கின்றன. ஆதலால், காலஞ்சென்ற திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், அக் கதைகளிற் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல கடிதத்தில் படங்களுடன் நீதி கதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிக்கப்பட்டுள்ளன. விலை, 4 அணா.

பாலநீதிச் செய்யுள் நூற்றிரட்டு.

ஔவையார், அதிவீரராம பாண்டியன் முதலிய முற்கால வித்வசிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதி நூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக்கூடியவாறு தெளிவான எளிய நடையில், மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ் மக்கள் கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களாயிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதி நூல்களை, சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்துகொள்வதற்கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன் நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு:

	ரூ.	அ.	பை.
முதற்படி (ஜூனியர்—Junior).			
பகுதி-1. உலகநீதி, ஆத்திசூடி	0	1	6
பகுதி-2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ..	0	2	0
பகுதி-3. வாக்குண்டாம், நல்வழி	0	2	0
இடைப்படி (இண்டர்மீடியேட்—Intermediate).			
பகுதி-1. நீதிவெண்பா	0	2	6
பகுதி-2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 ..	0	3	0
உயர்படி (ஸீனியர்—Senior).			
பகுதி-1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறிவிளக்கம்.	0	3	6
பகுதி-2. திரிகடுகம், நான்மணிக்கடிகை	0	5	0

தென்னிந்தியா வாசக புஸ்தகங்கள்

முதற் புஸ்தகம்	விலை	2½	அணு
இரண்டாம் புஸ்தகம்	,,	4	,,
மூன்றாம் புஸ்தகம்	,,	4	,,
நான்காம் புஸ்தகம்	,,	6	,,
ஐந்தாம் புஸ்தகம்	,,	6	,,

இந்தத் தென்னிந்தியா வாசக புஸ்தகங்கள் பாலர்வகுப்புத் தொடங்கிப் படிப்படியாக மேலே பல வகுப்புக்களுக்கும் பாடபுஸ்தகங்களாக புதிதாய் இயற்றப்பட்டுள்ளன. எலிமெண்டரி பாடசாலை பிள்ளைகளைப்பற்றி அதிக அனுபவமுள்ள உபாத்தியாயர்களால் இவைகள் எழுதப்பட்டன. சிறந்த வித்வான்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்றன.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டன.

EASY SELECTIONS TAMIL POETRY SENIOR BOOK I 3½ AS.